ஸ்ரீ

லோகரஞ்சனி.

இந்து ஸ்திரீபுருஷர்கள் ஞானாபிவிருத்தியின் பொருட்டு பிரசுரமாகும்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம் - ௧௦.] மன்மதவருஷ தைமீ. [எண் - ௧.

வேதாகமப்பிரகரணம்.

சிந்ந தத்துவம்.

ஸ்ரீலோகரஞ்சனி என்னும் இப்பத்திரிகைக்கு, அறிகுறிச் சிந்நமாகவுள்ள முத்திரையின் மீது, பலர் சந்தேகமுஞ் சிலர் தோஷாரோபணமுஞ் செய்கின்றனர். அதைப்பற்றிக் கண்டித்து எழுதுவதைக்காட்டிலும், "நெற்செய்யப் புற்றேயும்" என்னும் பழமொழிப்படி, முத்திரையின் உண்மைகளை வியவகரிப்பதே அறிவுடையோர் கடமையாதலால், அதன் தத்துவ விவரணத்தை மாத்திரம் நிருபிக்கின்றோம்.

சுருதி.

"ద్వా సుపర్ణా సయుజా సఖాయా
సమానం వృక్షం పరిషస్వజాతే ।
తయోరన్యః పిప్పలం స్వాద్వత్తి
అనశ్నన్నన్యో అభిచాకశీతి ॥"

கைவல்யம்.

"அச்சுவத்த மென் றொரு மரம்
அதி லிரண் டரும் பறவைகள் வாழும்
நச்சு மங் கொரு பறவை யம் மரக் கனி
நன் று நன்றெனத் தின்னும்
மெச்சு மங் கொரு பறவை தின்னாது
என வியங்கியப் பொருளாக
வைச்சு மாமறை சிவனை யீசனை
வகுத்தவா றறிவாயே."

என்கிறபடி, இச்சிந்நம் அநாதி நித்யமாயுள்ள சித்து, அசித்து, ஈச்சுரன் என்னும் முப்பொருளின் உண்மையை யுணர்த்துவதாம். அதாவது :—

விருக்ஷ ரூபமாயிருப்பது=உலகம்.
வலப்புறமுள்ள பக்ஷி=ஈச்சுரன்.
இடப்புறமுள்ள பக்ஷி=ஜீவன்.
சக்கிராகாரமாயுள்ளது = அண்டகோளம்.
அறுகோணத்தில் வெண்மையோடுகூடிய ஊர்த்துவமுக முக்கோணம்=பரலோகம் அல்லது நன்மை.
கருமையோடுகூடிய அதோமுக முக்கோணம்=நரகம் அல்லது தீமை.
நடுவிலுள்ள ஓம் என்பது=மூலமந்திரம்.

எனவே, உலகத்தில் பரமாத்மா, ஜீவாத்மா என்கிற இரண்டு பொருளுண்டு. பரமாத்மாவானது உலகத்தைச் சிருஷ்டித்து, நன்மை, தீமைகளைக்காட்டி ஜீவாத்மாவைச் சுகிக்கும்படி செய்து, தான் சாக்ஷிபூதமாகநிற்கும். ஜீவாத்மா உலகத்தைக்கண்டு மயங்கி பாபபுண்ணியங்களை நுகர்ந்து மாறிமாறிப் பிறந்துகொண்டேயிருக்கும். இருக்கவே, பரமாத்மா ஜீவாத்மாவைநோக்கித் தன்னை யடையும்படி, அண்டகடாகங்களோடு கூடிய உலகம் யாவும் மாறுதலடையும்; அதையே போகமாகக்கொண்டு அதோலோகத்தை (தீமையைத்தரும் நரகத்தை) யடையாதே, நீ நித்யாநந்தத்தைக்கருதி ஊர்த்துவலோகத்தை (நன்மையைத்தரும் மோக்ஷத்தை) யடைந்து, என்னுடன் பரமபதத்தில் நித்யமாய் வாழ்ந்துகொண்டிரு. அதற்குச் சாதகமாயுள்ளது ஓம் என்னும் பீஜாக்ஷர உச்சாரணமே; நீ அதையே உஜ்ஜீவனமாகக்கொண்டு வாழ் என்று கூறுவதாம்.

வேதாகமக் கருத்து.

வேதம் "த்ரைகுண்யவிஷயாவேத" என்னும் வாக்கியத்தின்படி, முக்குணப் பிரதிபாத்தியமா யிருக்கும்; இக்குண வாதாரங்களைக் கொண்டே அநேக பிரமமங்களைப் போதிக்கும். பூர்விகத்தில் பலர் புண்ணிய பரிபக்குவத்துக்கீடாகவும், தாம் ஞானத்தளவாகவும் பல பிரம்ம உபாசனைகளை யடைந்தார்கள். ஆராயுமிடத்து ஒரே பிரமந்தான் உண்மையில் விளங்கும். மற்றவை ஔபசாரிகமாகக் கூறப்பட்டிருக்கும். இவ்வேத வபிப்பிராயங்களை நேராகக்கொண்டு சித்தாந்தப்படுத்துவது மிகவுங்கடினம். இதற்கு அநேக முடிபுகளைக்கூறும் சாகைகளும், உபநிடதங்களுமுண்டு. இவைகளை நிச்சயஞ்செய்ய ஆறு அங்கங்களுண்டு. இருந்தாலும் அவைகளை விளங்கச் செய்யுமவை ஆகமம், ஸ்மிருதி, இதிகாசம், புராணங்களாம்; அன்றியும் உபநிடதங்களும் தெளிவாய் விளக்கும். விளக்கினாலும் ஒரே உபநிடதத்தினால் எவ்விஷயமும் முடிவாகாது. "சகலவேதாந்த பிரத்தியய நியாயப்"படி, பல உபநிடதங்களையும் பார்த்தால்தான் எடுத்தவிஷயம் முடிவுண்டாகும். ஆகமம் அப்படியன்றி ஒரே முடிபைக் கூறும். இது சைவாகமம், வைணவாகமம் என இருவகுப்புடைத்து. இவைமுறையே சிவபிரானாலும், விஷ்ணுபகவானாலும் சொல்லப்பட்டன. இன்னும் இவ்விஷயத்தைப்பற்றிக் கூறின் பெருகுமாதலால் சித்தாந்தப்பிரகரணத்தில் விளக்கிவருவாம்.

நாராயணோபநிடதம்.

ఓం సహనావవతు శాన్తిః ॥

ఓం అథపురుషోహవై నారాయణో కామయత । ప్రజాస్సృజేయేతి । నారాయణాత్ప్రాణోజాయతే । మనస్సర్వేంద్రియాణిచ । ఖంవాయుర్జ్యోతిరాపః పృథివీవిశ్వస్యధారిణీ। నారాయణాద్బ్రహ్మాజాయతే। నారాయణాద్రుద్రోజాయతే। నారాయణాదింద్రోజాయతే। నారాయణాత్ప్రజాపతఃప్రజాయతే । నారాయణాద్ద్వాదశాదిత్యారుద్రావసవస్సర్వాణిఛందాంసి । నారాయణాదేవసముత్పద్యంతే। నారాయణాత్ప్రవర్తంతే। నారాయణాత్ప్రలీయంతే। ఏతదృగ్వేదశిరోధీతే॥

மங்களாஸ்வரூபனும், புருஷோத்தமனும், நாரங்களாகும் ஆத்மாக்களை சரீரமாகவுடையவனுமாகிய நாராயணன் பிரஜைகளை சிருஷ்டிக்கவேண்டுமென்று நினைத்தார். நாராயணனிடத்தில் பிராணவாயுவும், மனசும், ஞானகர்மேந்திரியாதிகளும், ஆகாசமும், வாயுவும், ஜலமும் எல்லாவற்றையும் தரித்திருக்கின்ற பூமியும் பிறக்கின்றன. நாராயணனால் பிரம்மா பிறக்கின்றான். நாராயணனால் சிவன் பிறக்கின்றான். நாராயணனால் இந்திரன் பிறக்கின்றான். நாராயணனால் நவப்பிரஜாதிகள் பிறக்கின்றார்கள். நாராயணனால் பன்னிரு சூரியர்களும் பதினொரு உருத்திரர்களும் அஷ்டவசுக்களும் சமஸ்தமான வேதங்களும் உண்டாகின்றன. நாராயணனால் யாவும் விருத்தியடைகின்றன. நாராயணனாலேயே அழிகின்றன. இவ்வண்ணமாக ருக்குவேத உபநிடதம் கூறுகின்றது.

అథనిత్యోనారాయణః । బ్రహ్మానారాయణః । శివశ్చనారాయణః । శక్రశ్చనారాయణః । కాలశ్చనారాయణః । దిశశ్చ నారాయణః । విదిశశ్చ నారాయణః । ఊర్ధ్వంచనారాయణః । అధశ్చనారాయణః । అంతర్బహిశ్చనారాయణః । నారాయణఏవేదగ్ సర్వం । యద్భూతంయచ్చభవ్యం । నిష్కలంకో నిరంజనో నిర్వికల్పో నిరాఖ్యాతశ్శుద్ధోదేవ ఏకోనారాయణః। నద్వితీయోస్తికశ్చిత్ । యఏవంవేదసవిష్ణురేవభవతి । సవిష్ణురేవభవతి । ఏతద్యజుర్వేదశిరోధీతే ॥

நாராயணனே சாசுவிதன். பிரம்மாவும் நாராயணசொரூபன். சிவனும் நாராயண சொரூபன். இந்திரனும் நாராயண சொரூபன். காலபேதங்களும் நாராயணன். திக்குகளும் நாராயணன். உபதிக்குகளும் நாராயணன். மேற்பாகமும் நாராயணன். கீழ்ப்பாகமும் நாராயணன். உள்ளும் புறமும் உள்ளவன் நாராயணன். எவை யுண்டாக்கப்பட்டனவோ, உண்டாக்கப்படப்போகின்றனவோ அவை யாவும் நாராயண சொரூபமே. அந்த நாராயணன் தோஷம் நாடாதவன், பாபமில்லாதவன், விகற்ப மற்றவன், இன்னபெயருடையவனென்று சொல்லமுடியாதவன், அழுக்காறடையாதவன், தேவதேவன் ஆக விருக்கின்றான். நாராயணனொருவனே இருக்கின்றவன். இரண்டாவது ஒன்றுமில்லை. இங்ஙனம் யாவனறிகின்றானோ அவன் விஷ்ணு சொரூபத்தை யடைகிறான். விஷ்ணுசொரூபத்தையடை(ந்து அவனோடு கூடிவாழ்) கிறான். இப்படியாக யஜுர்வேத உபநிடதம் சொல்லுகின்றது.

ఓమిత్యగ్రేవ్యాహరేత్ । నమఇతిపశ్చాత్ । నారాయణాయేత్యుపరిష్టాత్ । ఓమిత్యేకాక్షరం । నమఇతిద్వే అక్షరే । నారాయణాయేతిపంచాక్షరాణి । ఏతద్వై నారాయణస్యాష్టాక్షరం పదం యోహవై నారాయణస్యాష్టాక్షరంపదమధ్యేతి । అనపబ్రువంత్సర్వమాయు

రేతి విందతే ప్రాజాపత్యం । రాయస్పోషం గౌపత్యం।
తతోమృతత్వ మశ్నుతే తతోమృతత్వ మశ్నుత ఇతి ।
ఏతత్సామవేదశిరోధీతే॥

ஓம் என்று முதலிலும், பிறகு நமஃ என்றும், அவற்றிற்குமேல் நாராயணாய என்றும் சொல்லவேண்டும். ஓம் என்பது ஓரெழுத்து. நமஃ என்பது இரண்டெழுத்துகள். நாராயணாய என்பது பஞ்சாக்ஷரம் எனும் ஐந்தெழுத்துக்கள். இதுவே நாராயணனுடைய அஷ்டாக்ஷரம் என்னுந் திருமந்திரம். எவன் பிரசித்தமாக ஸ்ரீமந்நாராயணனுடைய எட்டெழுத்தை ஜபிக்கின்றானோ அவன் இகழ்வின்றிப் புகழுடையவனாகி வேதநூற்பிராய நூறுமாகிய பூரணாயுசை அடைகின்றான். பின்பு பிரமபட்டத்தையும், குபேரபட்டத்தையும், இந்திரபட்டத்தையும் அடையத்தக்கவனாவான். பின்னரும் மோக்ஷத்தையு மடைவான். பிரமாநந்தத்தையு மடைவான், என்று சாமவேதம்விளம்புகின்றது.

ప్రత్యగానందం బ్రహ్మపురుషం ప్రణవస్వరూపం । అకార
ఉకార మకార ఇతి । తానేకధా సమభవత్తదేతదో
మితి । యముక్త్వా ముచ్యతే యోగీ జన్మసంసారబంధ
నాత్ । ఓం నమో నారాయణాయేతి మంత్రోపాసకః ।
వైకుంఠభవనం గమిష్యతి । తదిదం పుండరీకం విజ్ఞానఘ
నం తస్మాత్తటిదాభమాత్రం । బ్రహ్మణ్యో దేవకీపుత్రో
బ్రహ్మణ్యో మధుసూదన ఇతి । సర్వభూతస్థమేకం నా
రాయణం కారణపురుష మకారణం పరం బ్రహ్మోం ।
ఏతదథర్వశిరోధీతే॥

பரிபூரணாநந்தனாகியும், பிரம்மமான புருஷோத்தமனாகியும், பிரணவசொரூபனாகியும், அகார உகார மகார விகசிதனாகியுமிருக்கின்றான். அந்த ஓங்காரம் ஒன்றானதென் றறிந்து பிரம்ம நிஷ்டாபரனான யோகியானவன் ஜபிப்பதால் சனன சமுசார பந்தத்தி லிருந்து விடுபடுகின்றான். ஓம் நமோ நாராயணாய என்னும் திருமந்திரத்தை உபாசிக்கிறவன் வைகுந்த ஸ்தானத்தைச் சேருகின்றான். அந்தஸ்தானம் புண்டரீகம்போன்ற விஞ்ஞானசொரூபத்தை யுடையது. அது மின்னலொத்த பிரகாசமுடையது. அதிற்பிரகாசிக்கும் பிரம்மண்ணியன் தேவகிபுத்திரன், பிரம்மண்ணியன் மதுசூதனன். சகலமான பிராணிகளிடத்திலு மிருக்கின்றவனும், ஒன்றானவனும், காரணபுருஷனும் தனக்குக் காரணமில்லாதவனுமா யிருக்கிற நாராயணனே பரப்பிரம்மம்; என்று அதர்வணவேத உபநிடதம் செப்புகின்றது.

ప్రాతరధీయానో రాత్రికృతం పాపం నాశయతి । సాయమ
ధీయానో దివసకృతం పాపం నాశయతి । తత్సాయం
ప్రాతరధీయానః పాపోऽపాపో భవతి । మాధ్యందిన
మాదిత్యాభిముఖోऽధీయానః పంచమహాపాతకోపపా
తకాత్ప్రముచ్యతే । సర్వవేదపారాయణపుణ్యం లభతే
నారాయణసాయుజ్యమవాప్నోతి । శ్రీమన్నారాయణ
సాయుజ్యమవాప్నోతి । య ఏవం వేద ఇత్యుపనిషత్॥

இந்த (நாராயணோபநிடதத்தை) உதயகாலத்தில் அத்தியயனம் செய்கிறவன், இராத்திரிகாலத்திற் செய்த பாபத்தைப் போக்கடிக்கிறான். சாயங்காலத்தில் படிக்கிறவன் பகற்காலத்திற் பண்ணுந் தோஷத்தை நசிக்கச் செய்கிறான். அதை மாலை காலை யிரண்டுகாலத்திலும் படனம் பண்ணுகிறவன் பாபஞ் செய்தவனாயிருந்தாலும், பாபஞ்செய்யாதவனாகின்றான். மத்தியானகாலத்தில் சூரியனுக்கெதிராக பாராயணஞ்செய்கின்றவன் பிரம்மஹத்தியாதி டஞ்சமகாபாபங்களையும், சுராபான முதலிய உபபாபங்களையும் செய்தவற்றி லிருந்து விடுபடுகிறான். சகலவேத பாராயண புண்ணியங்களையடைகிறான். நாராயண சாயுஜ்ஜியத்தை யடைகிறான். பரமமங்கள ஸ்தானமான நாராயணனுடைய பரமபதத்தை யடைகிறான். இங்ஙனம் இதப்படி எவன் அறிகின்றானோ (அவன் முற்குறித்த புண்ணியங்களையே தடையின்றி அநுபவிக்கிறான்) என்று உபநிடதத்தின் தாற்பரியம்.

ஸஹநாவவதுவிதி சாந்திஃ.

ஸ்மிருதிஸாரப்பிரகரணம்.

ஸ்மிருதிவிவரணம்.

ஸ்மிருதி—ஆசாரம், விவகாரம், பிராயச்சித்தம் என்று மூன்று காண்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கும். இதிற்கூறும் விதிகளையே நான்குவருணத்தாரும் ஆசரிக்கவேண்டியதாம். இவ்விதிகளைப்பற்றிக் கூறுவன பதினெட்டு ஸ்மிருதிகள். இவ்வொவ்வொன்றையு மநுசரித்துச் சொல்லும் உபஸ்மிருதிகளும் பதினெட்டுண்டு. இவைகளுக்குப் பின்னர் அநேகர் வியாக்கியானஞ்செய்துள்ளார். இவையல்லாமலும் வைத்தியநாத தீக்ஷிதம், தர்மசிந்து முதலிய நிபந்தனைக்கிரந்தங்களு முண்டு. இவற்றிற்கெல்லாம் மநுஸ்மிருதியே ஆதாரம். அதற்கு விரோதித்துக்கூறுமவைகள் பிரமாணமாகமாட்டா. ஆகையால் வருணபேத தர்மங்களையும், அவற்றின் ஆசாரமுதலியவைகளையும் இனி விவரித்து

வருவாம். இவைகளுக்கு ஆதாரமாயுள்ள சிருஷ்டியைப்பற்றி தற்சமயம் ஸ்மிருதிகளில் கூறுகின்றனவற்றில் இரண்டொன்றை எழுதுவாம்.

சிருஷ்டி—மனுஸ்மிருதி.

యోసావతీంద్రియగ్రాహ్యస్సూక్ష్మోవ్యక్తస్సనాతనః ।
సర్వభూతమయోచింత్యస్సఏవస్వయముద్బభౌ ॥

இந்திரியங்களால் அறியப்படாதவனும், சூக்குமனும், அவ்வியக்தனும், சனாதனனும், சருவபூதமயனும், சிந்திக்கக்கூடாதவனுமாகியு மிருக்கின்றவனெவனோ அவன் தானேமுதலில் உற்பவமானான்.

సోభిధ్యాయశరీరాత్స్వాత్సిసృక్షుర్వివిధాఃప్రజాః ।
అపఏవససర్జాదౌతాసువీర్యమపాసృజత్ ॥

அந்த பரமபுருஷன் தன்னுடைய சரீரத்தினால் பலவிதபிரஜைகளைச் சிருஷ்டிக்கநினைத்து, ஜலமாதிகளைச் சிருஷ்டித்தவனாய், அதில் தன்னுடைய தேஜசான வீரியத்தை விட்டவனானான்.

ఆపోనారాఇతిప్రోక్తాఅపోవైనరసూనవః ।
తాయదస్యాయనంపూర్వంతేననారాయణస్మృతః ॥

அவ்வீச்சுரன் பூர்வமே ஜலத்தையும், நாரசமூகங்களையும் இருப்பிடமாகக்கொண்டு வசிப்பவனாதலால், நாராயணன் என்னும் பெயரையடைந்தான்.

[சிலர் ஜலமாகிய நாரத்தைச் சிருஷ்டித்து, அதை வீற்றிருக்க ஸ்தானமாகக் கொண்டமையால், நாராயணன் எனப்பெயர்வந்தது என்பர். ஆயின், ஜலத்துக்குமுன்னேயே பிரகிருதி, மகத்தத்துவ முதல், பிருதிவி யீறான விகாரங்கள் உண்டாயிருக்கிறமையால், இவைகட்கு விரோதமாமென்க. அன்றியும், "நராணாம் ஜீவநாமயநத்வாத் ப்ரளய இதிவா நாராயணா" என்பதற்கும் விரோதமாம்.]

తదండమభవద్ధైమంసహస్రాంశుసమప్రభం ।
తస్మిన్జజ్ఞేస్వయంబ్రహ్మాసర్వభూతపితామహః ॥

ஜலத்தில் பிரவேசித்த பகவானுடைய வீரியத்தினால் பொன்மயமான சூரியபிரகாசம்போன்ற அண்டம் உண்டானது. அதில் சர்வ பூதங்களுக்குந் தலைவனான பிரமன் உண்டானான்.

యత్తత్కారణమవ్యక్తంనిత్యంసదసదాత్మకం ।
తద్విసృష్టస్సపురుషోలోకేబ్రహ్మేతికీర్త్యతే ॥

காரணனும், அவ்வியக்தனும், நித்தியனுமுள்ள பரமபுருஷன் அபிநிவேசத்தினாலுண்டான பிதாமகன் உலகத்தைச் சிருஷ்டிக்கத் தொடங்கினான். (தொடரும்.)

இதிகாசபுராணப்பிரகரணம்.

புராண அபிப்பிராயம்.

ஆதியில் பிரம்மாவினால் சொல்லப்பட்ட புராணம் ஒன்றே சாஸ்திரங்களுக்கெல்லாம் முதலானதாம். பின்னர் பதினெட்டாக ரிஷிகள் செய்தார்கள். இப்புராணங்களில், சிருஷ்டி, சங்காரம், வமிசம், மநுவந்தரம், வமிச சரித்திரங்கள் சொல்லப்பட்டிருக்கும். இவை ஒவ்வொரு கற்பத்தைப்பற்றிச் சொல்லப்பட்டன. இவற்றால் ஒன்றுக்கொன்று மாறுபட்டிருக்கும். இவ்வாறு மாறுபடுவதினால் புராணங்கள் கற்பனைகளென்பர். புராணங்களைச் சாத்துவிக இராசத தாமத புராணங்களாக வகுத்துக் கூறுவர். புராணங்கள் வேதார்த்தங்களை விளக்கிச் சொன்னமையாலும், எம்பெருமான் ஒவ்வொரு கற்பத்தில், ஒவ்வொரு தேவதையை அதிஷ்டித்துப் பிரதானரூபமா யிருந்து சிருஷ்டி ஸ்திதி லயங்களைச் செய்தமையாலும் வேற்றுமையாகக் காணப்படும். இவற்றினால் புத்திமான்கள் பொய்யாகக் கொள்ளார்கள். இந்த வராக கற்பத்தைப்பற்றிச் சொன்ன விஷ்ணுபுராணம் ஒன்றையே பிரமாணமாகக் கொள்ள வேண்டும். மற்ற புராணங்கள், பூர்வகற்பபேத புண்ணிய சரித்திரங்களாகையால் படனம்பண்ணுவதற்கு மாத்திரம் யோக்கிய முண்டானதாம். இதிகாசமும் புராணங்கள்போல் சரித்திங்களைக் கூறுவதால் ஒன்றேயாகும். புராண சரித்திரங்களை யறிவது மிகவும் புண்ணியமும் விவேகமும் உண்டாகும். ஆதலால் மநுவந்திரங்கள் முதல், முறையே சுருக்கமாக எடுத்தாளுவாம்.

———o———

நடந்த மனுவந்தரங்களின் விவரம்.

(விஷ்ணுபுராணத்திலிருந்து எடுத்தது.)

ஆதியில் சுவாயம்புவமனு, பின்பு முறையே சுவாரோசிஷர், உத்தமர், தாமசர், ரைவதர், சாக்ஷுஷர் என்கிற மனுக்கள் அறுவரும் சென்றவர்கள். இப்பொழுது சூரியகுமாரரான வைவச்சுதமனுவினுடைய அந்தரம் நடக்கிறது.

ஆதியில் பிரம்மா பிரஜைகளை இரட்சிக்கிற நிமித்தமாகத் தம்முடைய அமிசத்தினாலே ஒரு புத்திரனைச் சிருஷ்டித்தார். அவர்தான் சுவாயம்புமனு. [அந்த சுவாயம்புமனுவந்தரத்தையும் அதிலிருந்த தேவர் முனிவர் முதலானோரையும் பிறகு விவரமாக எழுதப்படும்.]

இரண்டாவது, சுவாரோசிஷ மனுவந்தரம்—இதில் பாராவாரர், துஷிதர் என்கிற தேவதைகளும், விபச்சித் என்கிற இந்திரனும், ஊர்ஜஸ்தம்பன், பிராணன், தத்தன், அக்கினி ரிஷபன், நிஸ்வான், சார்வரீவான் என்கிற சப்தரிஷிகளும் இருந்தார்கள். அந்தமனுவுக்கு சயித்திரன் கிம்புருஷன்முதலான சிலகுமாரரும் இருந்தார்கள்.

மூன்றாவது, உத்தம மனுவந்தரம்—அதில் சுசாந்தியென்பவன் தேவராசனாக இருந்தான். சுதாமாக்கள், சத்தியர், சிவர், பிரதர்த்தனர், வசவர்த்திகள் என்கிற ஐந்துகணதேவதைகள் கணமொன்றுக்குப் பன்னிருவராகச் சேர்ந்திருந்தார்கள். வசிஷ்டருடைய குமாரரேழுபேர் அதில் சப்தரிஷிகளானார்கள். அஜன், பரசுதிவியன் முதலானவர்கள் அந்த மனுவின் குமாரர்கள்.

நான்காவது, தாமச மனுவந்தரம்—அதிலே சுபாரர், ஹரிகள், சத்தியர், சுதீகள் என்கிற கணதேவதைகள் கணமொன்றுக்கு இருபத்தேழுபேராக இருந்தார்கள். சிபி சக்கிரவர்த்தி நூறு அஸ்வமேதங்களைச் செய்ததனாலே வச்சிராயுதமுதலான சின்னங்களோடுகூடி இந்திரனானான். ஜோதிர்த்தாமா, பிருது, காவியன், சைத்திரன், அக்கினி, தனகன், பீவான் என்கிற நாமதேயமுள்ள சப்தரிஷிகளிருந்தார்கள். நரன், கியாதி, கேதுரூபன், சானு, சங்கன் முதலானவர்கள் அந்தத் தாமசமனுவின் புத்திரர் இவர்கள் மகாபல பராக்கிரமாதி குணமுள்ளவர்கள்.

ஐந்தாவது, ரைவத மனுவந்தரம்—இம் மனுவந்தரத்தில் விபுவென்பவன் இந்திரன். அமிதாபர், பூதனயர், வைகுண்டர், சுசமேதர் என்பவர்கள் தேவகணங்களாய் கணமொன்றுக்குப் பதினான்குபே ரிருந்தார்கள். இரணிரோமா, வேதசிரீ, ஊர்த்துவபாகு, அபரன், வேதபாகு, சுதாமா, பர்ச்சனியன் என்பவர்கள் சப்தரிஷிகள். அந்த மனுவின்புத்திரர் யாரென்றால் பலபந்து, சுசம்பாவியன், சத்தியகன் முதலானவர்களென்றறியும். இந்த சுவாரோசிஷர், உத்தமர், தாமசர், ரைவதர் என்கிற மனுக்கள் நால்வரும் பிரியவிரதருடைய வமிசத்திற் பிறந்தவர்கள். அந்தப் பிரியவிரதர் என்னும் ராஜரிஷியானவர் தவத்தினாலே ஸ்ரீவிஷ்ணுவை யாராதித்து தன்குலத்தில் மனுவந்தராதிபதிகள் உதிக்கும்படியான பாக்கியத்தைப்பெற்றார்.

ஆறாவது, மனுவந்தரத்தின் அதிபதி சாட்சுஷர் என்கிற மநு. மனோஜவன் என்பவன் தேவேந்திரனானான். ஆப்பியர், பிரசூதர், பவியர், பிருதுகர், லேகர் இவ்வைந்துவிதமான கணதேவதைகள் கணமொன்றுக்கு எட்டுப்பேராக விருந்தார்கள். இவர்கள் மகானுபாவர். சுமேதன், விரதன், அவிஷமான், உத்தமன், மது, அதிநாமா, சகிஷ்ணு என்பவர்கள் சப்தரிஷிகள். ஊரு, பூரு, சுதத்தியும்னன்முதலான அந்த மநுவின்புத்திரர் ராஜாக்களானார்கள்.

இனி, இப்போது நடக்கின்ற ஏழாவது மநுவந்தரத்திற்குச் சூரியகுமாரனான சிரார்த்தவன் மனுவாகி யிருக்கிறார். இதில் ஆதித்தியர், வசுக்கள், ருத்திரர் முதலானவர்கள் தேவதைகளாயிருக்கிறார்கள். புரந்தரனென்பவன் தேவராஜனாயிருக்கிறான். வசிஷ்டர், காசியபர், அத்திரி, ஜமதக்கினி, கவுதமர், விசுவாமித்திரர், பாரத்துவாஜர் இவ்வெழுவரும் சப்தரிஷிகள். இக்ஷ்வாகு, நிருகன், திருஷ்டன், சர்யாதி, நரிஷ்யந்தன், நாபாகன், அரிஷ்டன், கரூஷன், விருஷத்திரன் இவ்வொன்பதின்மரும் அம்மனுபுத்திரர்.

ஸ்ரீவிஷ்ணுவினுடைய சாத்துவிக சத்தியானது சகல மனுவந்தரங்களிலேயும் தேவதாவதாரத்தினாலே மனுமுதலானோரையும் வியாபித்திருக்கிறது. அந்த ஸ்ரீமகாவிஷ்ணு சுவாயம்பு மனுவந்தரத்திலே ஆகூதியென்பவளிடத்திலே யக்கியனென்கிற திருநாமத்தோடு மனசினாலவதரித்தார். அவரே சுவாரோசிஷமனுவந்தரம வந்தபோது துஷிதையென்பவளிடத்திலே துஷிதா என்கிற தேவதைகளோடுகூட அஜிதன்என்கிற திருநாமமுள்ளவராய் அவதரித்தார். பின்பு உத்தமமனுவந்தரத்திலே சத்தியையென்பவளிடத்திலே சத்தியன் என்கிற திருநாம முள்ளவராய் சத்தியரென்னும் தேவதைகளோடுகூட அவதரித்தார். மறுபடியு மவர் தாமசமனுவந்தரத்திலே ஹரியை யென்கிறவள் கருப்பத்திலே ஹரிகள் என்கிற தேவர்களோடுகூட ஹரியென்கிற திருநாமமுடையவராய் அவதரித்தார். சாட்சுஷ மனுவந்தரத்திலே விகுண்டையின்கருப்பத்தில் வைகுண்டர் என்கிற தேவதைகளோடு வைகுண்டனென் றவதரித்தார். இந்த வைவசுவத மனுவந்தரம் வந்தபோது காசியபருக்கு அதிதியினிடத்திலே வாமனரூபியாய் அவதரித்து மூன்றடிகளாலே சகலலோகங்களையும் ஆக்கிரமித்து அம்மூன்று லோகங்களையும் சத்துருவென்னும் பெயரேயில்லாம லிருக்கும்படி செய்து புரந்தரனுக்குப் பிரசாதித்தருளினார். இப்படி அவர் அனுப்பிரவேசித்து வளர்த்து வருகிறபடியினாலே விஷ்ணு என்கிற திருநாமத்தை யடைந்திருக்கிறார். ஆதலாலே சகல தேவதைகளும் சகலமனுக்களும் சகல சப்த ரிஷிகளும் சகல மனுபுத்திரரும் இந்திரர்களும் யாவரும் ஸ்ரீவிஷ்ணுவினுடைய அயிசுவரியமானவர்களென்றறியும்.

சித்தாந்தப்பிரகரணம்.

ஆரியமத சித்தாந்தம்.

ஆரியர் சிருஷ்டிகாலந் தொடங்கி இக்காலம் வரையில் சருமம், ஞானம், பக்தி, யோகங்களால் சர்வேச்சுரனை யறிந்து, சதா தியானித்து மோக்ஷாபேக்ஷை யுடையவர்களா யிருக்கின்றார்களென்பது சாத்திரங்களால் நன்குவிளங்கும். அவையாவன :—

அநாதியாயும், நித்தியமாயும், சத்தியமாயுமிருக்கும் வேதமே, பிரகிருதி சொரூபம், சீவ சொரூபம், பரசொரூபம் மூன்றையும் பிரகாசிக்கச்செய்யும். அந்த வேதார்த்தத்தையும், வேதபுருஷன் இருதயத்தையும் தெரிந்த பிரம்மாவும், நவப்பிரஜாதிகளும், பிரம்மரிஷிகளும்,மனுக்களும், ராஜரிஷிகளும், தங்கள் ஞானாநுபவத்தால் உலகோபகாரத்தைக்கருதி, ஸ்மிருதேதிகாசபுராணாதிகளை வெளியிட்டார்கள். அவை வைதிகதருமங்களைச் சார்ந்திருத்தலால், வைதிக சாஸ்திரங்களென்று சொல்லப்படும். அச்சாஸ்திரங்கள் ஆநந்தமயமான பிரம்மத்திற்குமல்ல, சடசொரூபமான பிரகிருதிக்குமல்ல, பிரகிருதி வசியனும், துக்கிதனுமிருக்கும் ஆத்மாவுக்கே பிரயோஜனமாயிருக்கும். இச்சாஸ்திரங்கள் பிரகிருதி சம்பந்தத்திற்கு ஏதுவான மகாபாதகங்களைச் செய்யத்தகாதென்று கண்டிக்கிறதினாலும், ஐஹிகாமுஷ்மிக மோக்ஷங்களை விதிக்கிறதினாலும் முக்குணவிஷயங்களாயிருக்கும் ; எங்ஙனமெனின் :—

வேதமானது பூர்வகாண்டத்தில் தாமசவாக்கியங்களால், ஐஹிகர்=உலகசம்பந்தத்தை நாடியவர்களுக்கு உருத்திர துர்க்கா கணபதி க்ஷேத்திர திக்குப்பாலகாதிகள் இலாஞ்சன மந்திர பூசைகளை விதித்தது. இராஜச வாக்கியங்களினால், ஆமுஷ்மிகர்=சொர்க்காதி போகங்களை யபேட்சித்தவர்களுக்கு சதுர்முகசுரேந்திர சூரியாக்கினிகள் இலாஞ்சன மந்திரபூசைகளை விதித்தது. ஞானகாண்டத்தில் சாத்துவிக வாக்கியங்களால், முமுக்ஷுக்கள்=மோக்ஷத்திலிச்சையுடையவர்களுக்கு ஸ்ரீமந்நாராயணன் இலாஞ்சன மந்திரபூசைகளை விதித்தது.

இப்படியே, ருஷிகளும் ஸ்மிருதேதிகாசபுராணங்களில், தாமதவைதிகம், இராசதவைதிகம், சாத்துவிக வைதிகம் இம்மூன்றையும் விதித்து, ஐஹிகாமுஷ்மிகமோக்ஷகர்=இகலோகம், சொர்க்கலோகம், மோக்ஷம் இம்மூன்றையும் அபேட்சிக்கிறவர்களுக்கு யாகாதி கர்மங்களையும் பஞ்சபூசைகளையும் விதித்தார்கள் ; இதை மிசிரவைதிகமென்று சொல்லப்படும்.

ஆகையால், பரமவைதிகம், வைதிகம், மிசிர வைதிகம், தாமதவைதிகம், சைவம்முதலிய சித்தாந்தங்களே யிருக்கின்றன.

பகவற்கீதையில், தேவதைகளையும், பிதுரு தேவதைகளையும், யக்ஷ ரக்ஷ பிசாச பூதாதிகளையும் பூசிப்பவர்கள் அந்தந்த தேவதா சாயுஜ்ஜியத்தை யடைந்து, அத்தேவாதிகளுக்கு அந்தர்யாமியாயிருக்கும் பரமனை அவர்கள் சதா தியானிப்பதைத் தாங்களும் தியானித்து அந்தந்த தேவதைகள் நாசமடைகிறகாலத்தில் அவர்களோடு மோக்ஷத்தை யடைவார்கள் எனவும், சூரியனை யாராதித்தவர்கள், ஆரோக்கியத்தையும், அக்கினி முதலியவைகளை யாராதித்தவர்கள் ஐசுவரியத்தையும், சங்கரமூர்த்தியை யாராதித்தவர்கள் ஞானத்தையும், சநார்த்தனனை யாராதித்தவர்கள் மோக்ஷத்தையும் அடைவார்கள் எனவுங் கூறுகின்றபடி, பரமவைதிகர்கள் சத்தியோமுத்தியாகிய மோக்ஷத்தையும், வைதிகர்கள் கிரமமுத்தியாகிய சொர்க்கமோக்ஷத்தையும், மிசிரவைதிகர்கள் இக சொர்க்க மோட்ச மூன்றையும், தாமதவைதிகர்கள் இகலோகத்தையும, சைவர்கள் சிவலோகம்=கைலாயத்தையும் அடைந்துவருகிறார்கள்.

இவற்றின் உண்மைகளை யறிந்து, நற்கதிக்கு வழிதேடாது, பின்வந்தோர் நெல்லிற் புல்லெழுவதுபோல, வேதசாதகமாகிய சித்தாந்தங்களுக்கு, மாறுபாடான பாதக சித்தாந்தங்களைச் செய்தார்கள். இவைகளே ஒன்றுக்கொன்று மாறுபட்டிருக்கும். படவே ஆஸ்திகத்தை விட்டு ஆஸ்திக நாஸ்திகராகி, படிப்படியாக பூர்வ ஜன்ம வாசனையைத் தொட்டுக் கெடுதிக்குள்ளானார்கள். இப்படிப்பட்டவர்களாலே பூர்வ சாஸ்திரங்கள் பொய்யெனச்சொல்ல நேர்ந்தன. பின்பே ஆதிபகவன், அநேகமூர்த்தி யவதாரங்கொண்டும் அடியாராகவும் மானிடச்சட்டை போர்த்து, அநேக தத்துவசாஸ்திரங்களை அந்தந்த சித்தாந்திகளுக்கும் புகட்டினா. தருமங்களை நிலைநாட்டினார். பரன் நானேயென்று சுட்டிக்காட்டினார். காட்டியும் பிரகிருதிவாசனையினால் ஆசுரக் கிருத்தியங்களே அதிகமாயின. பூசுரக்கிருத்தியங்கள் அழிந்துபோயின. எம்பெருமான் பின்னரென்செய்வர். இத்தகைய ஆத்மாக்களிருப்பின் உலகத்துக்கே கெடுதியாகுமென்றுன்னி, அருகத, புத்த, லோகாயன, மோஹன சாஸ்திரங்களைக் கற்பிக்கச்செய்து, மூலதோஹானியாக்கி யொழித்தா,

வைஷ்ணவ மதம்.

ஸ்ரீமந்நாராயணனாகிய ஸர்வேஸ்வரன், நித்தியமாயும், ஆதியற்றவனாயும், மங்களரூபனாயும், என்றும் அழிவில்லாத பரமபதத்தில், பரவாசுதேவன் என்ற பெயரோடு சுயம்பிரகாசமா யிருப்பன். இந்தப் பரமபுருஷன் நிமித்தகாரணம், உபாதானகாரணம், சகாயிகாரணம் என்னுந் திரிவித காரணனாகி சருவ வியாபகனாயிருப்பன். இவனுக்குப் பிரகிருதியும், ஆன்மாக்களும் சரீரங்களாயிருக்கும். ஆன்மாக்கள் நித்தியர், முத்தர், முமுட்சுக்கள், கேவலர், சம்சாரிகள் என்று ஐந்துவிதமாயிருப்பர். இவ்வைவித ஆத்துமாக்கள் உஜ்ஜீவிக்கும்பொருட்டு பரத்துவம், வியூகம், அந்தரியாமித்துவம், அர்ச்சாவதாரம் என ஐந்துவகைப்பட்டிருப்பன்.

பரத்துவமாவது—காலத்திரயங்களும், முடிவிலாததுமான பரமபதத்தில் பஞ்சோபநிஷண்மயமாயிருந்து, சருவஜகத்துக்குங் காரணமாய், சிருஷ்டி ஸ்திதி லய மோக்ஷ பிரதமாய், நித்தியர், முத்தர், முமுட்சுகளுக்கு சேவை சாதித்துக்கொண்டிருக்கும் இருப்பு. வியூகமாவது—சங்கருஷ்ணர்,பிரத்தியும்னர், அநிருத்தர் எனும் ரூபங்களால், சிருஷ்டி ஸ்திதி சம்மாரங்களைச் செய்யும் நிலை. விபவமாவது—சாதுக்களை ரக்ஷிக்கவும், தர்மத்தை ஸ்தாபிக்கவும் இச்சாநுகுணமாகத் திருவுருக்கொள்ளும் அவதாரங்கள். அந்தரியாமித்துவமாவது—சருவாத்துமாக்களுடைய இருதயகமலத்திலே எழுந்தருளியிருக்குந் தன்மை. அர்ச்சாவதாரமாவது—சேதனர்களுக்கிஷ்டமான தாருபாஷாண லோகங்களில் கோயில்களிலும், கிருகங்களிலும் எழுந்தருளியிருக்குங் கோலம். இவனே சத்து, சித்துக்களுக்கெல்லாம் ஈச்சுரன் என்னப்படுவான்.

விமலாநந்த சொரூபிகளான நித்திய சூரிகளோடு கலவாமல், அநாதியாயுள்ள மாயையில் சிறகில்லாத பக்ஷிகளைப்போலவும், மெழுகிலொட்டிய பொன்னைப்போலவும், எள்ளிலெண்ணெயைப்போலவும், கட்டையிற் கனலைப்போலவும், அவித்தியா சருமவாசனையினா லுண்டான மும்மலத்துடன் கட்டுண்டிருக்கும் சொற்பஞானமுள்ளவர்களாகிய சீவர்களைக் கடாக்ஷித்து, ஈச்சுவரன் சத்தியசங்கற்பனாகி அவித்தையான அசித்தைப் பரிணமிக்கச் செய்து, அதிலிருந்து மகத்து, அகங்காரம், குண முதலானவைகளையும், பஞ்சபூதங்களையும் விகாசிப்பித்து அவயவகரசரணாதிகளைக் கொடுப்பன்.

இவ்வீச்சுவரன் தயை, க்ஷமை, ஆநந்தம் ஆகிய ஸ்ரீ, பூ, நீளாவென்னு மூன்று சத்திகளையுடைத்தாயிருப்பன். அப்பிராகிருதமாகிய நித்தியவிபூதியாகிய பரமவியோமத்தையே ஸ்தானமாயுங் கொண்டிருக்கின்றமையால், பிராகிருதமாகிய சொர்க்கபூதலமுதலிய லீலாவிபூதிகளைச் சிருஷ்டிப்பன். அவனே பூர்வ புண்ணியத்தையடைந்த சீவர்களைக்கடாக்ஷித்தும், தானும் உலகத்தை சிருஷ்டி, ஸ்திதி, சம்மாரங்களைச்செய்துகொண்டிருப்பன்.

அவ்வாசுதேவன் இராஜசகுணப்பிரதானனாகி அநிருத்த வியூகமாயிருந்து முதலமிசத்தினாலே பிரம்மாமுகமாகவும், இரண்டாமமிசத்தினாலே மரீசி முதலான பிரஜாபதிகள் மூலமாகவும், மூன்றாமமிசத்தினாலே காலதத்துவத்தினுள்ளும் நான்காமமிசத்தினாலே சகலபூதராசிகளுள்ளும் அந்தரியாமியாக விருந்து சிருஷ்டி செய்வன். அந்த சருவேச்சுவரன்தானே சத்துவகுணப்பிரதானனாகி பிரத்தியும்ன வியூகமாயிருந்து, முதலமிசத்தினாலே இச்சாமாத்திரத்தால் பலவிதமூர்த்தி யவதாரங்களைச்செய்தும், இரண்டாமமிசத்தினாலே, மநுமுதலிய மகாராஜாக்களுள்ளும், மூன்றாமமிசத்தினாலே காலதத்துவத்தி னுள்ளும், நான்காமமிசத்தினாலே சகல பூதராசிகளுள்ளுமிருந்து இரட்சித்துக்கொண்டிருப்பன். பின்னவ்வெம்பெருமானே தாமதகுணப் பிரதானனாகி சங்கருஷ்ண வியூகமா யிருந்து, முதலமிசத்தினாலே புண்ணியம் மிகுந்த பவசேதன மூர்த்தியாகிய சங்கரனுடைய இருதயத்தில் வீற்றிருந்தும், இரண்டாமமிசத்தினாலே அக்கினி யமன் பஞ்சபூதங்க ளுள்ளும், மூன்றா மமிசத்தினாலே காலதத்துவத்தி னுள்ளும், நான்காமமிசத்தினாலே சருவபூத ராசிகளுள்ளுமிருந்துஞ் சங்காரஞ் செய்துகொண்டிருப்பன்.

இவ்வண்ணம் அநாயாசமாய் யுகங்கடோறும் சிருஷ்டி ஸ்திதி சம்மாரங்களைச் செய்துகொண்டுவரும் சர்வ ஸ்வாமிக்கு, ஆன்மாக்கள்சொத்தாயிருந்து, முதலாக பரம வைதிக ஸ்ரீவைஷ்ணவ சத்துவகுண சம்பாஷணைகளைச் சதாசெய்யும் ஓர் நல்லாசிரியனை யடைந்து, விசேஷகடாக்ஷம் பெற்று சமாஸ்ரயணத்தையும், ஊர்த்துவபுண்டரத்தையும், தாசியநாமத்தையும், அஷ்டாக்ஷரமந்திர ரகசியங்களையும், எம்பெருமான் திருவாராதனத்தையுமடைந்து, பக்தி பாரவசியராகி, அர்த்தபஞ்சகஞானத்தையும், சித்து, அசித்து, ஈச்சுவர லக்ஷணங்களான தத்துவத்திரயங்களையும் விசாரணைசெய்துகொண்டு மோக்ஷத்தி லிச்சையுடையவரா யிருக்கவேண்டும்.—(வரும்.)

சைவமதம்.

" நிராமயமாய் நிஷ்களமாய்
நித்தியமாய் நின்மலமாய்ப்
புராதனமாய்ச் சஞ்சலமாய்ப்
பூரணமாய்ப் புனிதமாய்ச்
சராசரமாய்ச் சாட்சியாய்ச்
சத்தியமாய்ச் சித்துருவாய்ப்
பராபரமாய் வெறுவெளியா
யிருக்குமந்தப் பரமசிவம்."

" நீடுபராசத்தி நிகழிச்சாஞான
நிறைகிரியைதரவதனை நிமலன்மேவி
நாடரியகருணைதிரு வுருவமாகி
நின்றுபலகலைநாத விந்துவாதி
கூடுமொழிவளர்குடிலை மாயைமேவிக்
கொடுவினைகொடனுகரண புவனபோகம்
பீடுபெறநிறுவியவை யொடுக்குமேனி
பிறங்கியநிட்களசகளப் பெற்றியாமே."

" மந்திரஞ் செபந் தியானம் பூசனை வணக்கம் வேண்டா, அந்தமிலாத முத்திக் குபாயமேயறிய வேண்டும், சிந்தனை புறமே செல்லிற் றுயரமே திரிய மீட்கின், பந்தமாந் துன்ப நீங்கிப் பரமான வின்பஞ் சேர்வார்."

பரமசிவம் அனாதியாய்; நிராகாரமாய், நிராலம்பமாய், சிதாகாசமாய் இருக்கும். இது கடந்த பொருள் அதாவது சூனியம். அதனிடத்திலிருந்து சத்தி யுண்டாயிற்று. இச்சிவசத்தியே சிருஷ்டிக்கப் பிரமனாகியும், இரக்ஷிக்க விஷ்ணுவாகியும், சங்கரிக்க உருத்திரனாகியும், திரோபவிக்க மகேசனாகியும், அனுக்கிரகிக்க சதாசிவனாகியும் பிரிந்து, சீவன்களுக்குத் தநுகரணபுவனபோகங்களைக் கொடுத்துக்கொண் டிருக்கும். சிவமும், சத்தியும் ஒன்றாகவே பாவிக்கப்படும். அத்தநுகரணபுவனபோகங்களைச் சுத்தம், அசுத்தம் என்கிற மாயைகளினாலே சத்தி செய்யும்.

இவற்றினால், சிதாகாசரூபமாயிருக்கிற பரமான்மாவாகிய பதியும், சித்துரூபமாகி அப்பதியை யடைந்து கலந்து நிற்கும் சீவன்முக்தனாகும் பசுவும், அசத்தாய் மாயாரூபமா யிருக்கிற உலகபாசமும் நித்தியப்பொருள்களே. சிவம் நிமித்தகாரணம், சத்தி துணைக்காரணம், மாயை முதற்காரணம். நிமித்தகாரணனாகிய குலாலன், தண்டு சக்கரத்தைத் துணைக்காரணமாகக் கொண்டு மண்ணை முதற்காரணமாய்ப்பெற்று காரியமாகிய மட்பாத்திரங்களை எப்படிச் செய்கிறானோ, அப்படியே சீவன்களுக்கு சிவபெருமான் உலகத்தைச் சிருட்டிக்கிறான் என்பதாம்.

அச்சிவபிரானும் கடபடாதிகளிற்காணும் ஆகாசம்போல், உள்ளும்புறம்புமாயிருந்து, பஞ்சவடிவாகநின்று, சிருஷ்டி ஸ்திதி சங்கார திரோபவ அநுக்கிரகஞ்செய்வன். சிவமும் சத்தியும் நெருப்பிற்சூடும், சூரியனில் உஷ்ணமும், தண்ணீரிற் குளிர்மையும், மலரின் மணமும்போலிருக்கும். இவ்வண்ணம் நின்மலமாய், நிர்விசேஷமாய், நிராமயமாய், சுயம்பிரகாசமாய் இருவகை மாயையிலுள்ள போகங்களுக்கு மேலாகிய பரமாநந்தத்தைக்கொடுக்கும் ஒப்புயர்வற்ற நிஷ்கள பரசிவ ஐக்கியத்தையே சீவன் விரும்பவேண்டும்.

அந்த சருவவுபாதி சூனியமா யிருக்கிற நிஷ்களவஸ்துவே, மாயையின் உபாதி சொரூபமாய் விளங்குகின்ற சைதன்னிய துவாரத்தினாலே தோன்றுவதே சகளவஸ்துவாம். இந்தச் சகளநிஷ்கள சொரூபாரூபஞானத்தை யடைவதற்கு சரியை, கிரியை, யோகம், ஞான முதலிய நான்குபடியிருக்கும். ஞானத்தாலேயே, சிவ சாயுச்சியத்தை யடையவேண்டும். அத் துரியஞானத்தை அடைந்தவன் மோக்ஷத்தை விரும்பாமலிருந்தாலும், சிவத்தோடு இரண்டறக் கலத்தலை முறைமையாய் அடைவான்.

இச்சிவசாயுச்சியத்தையடைபவர்கள் ஆருதாரங்களையும், அஷ்டயோகங்களையும், மூர்த்திபூஜைகளையும் இன்னுமுள்ள கிரியைகளையும் அநுஷ்டிக்கவேண்டிய தவசியமில்லை. இவையெல்லாம் நின்மல நிர்க்குண நிர்விசேஷ சித்துரூபாநந்தமாயிருக்கிற ஞாநாநுஷ்டானத்தைக் காட்டிலும் விசேஷமானதல்ல. அவ்வநுஷ்டானங்களெல்லாம் சிவாகமத்திற் சொல்லப்பட்டிருந்தாலும் அவைகளால் காலாக்கினி உருத்திரபுவனமுதலாக அனாசிருத புவன முடிவாக வுள்ள இருநூற் றிருபத்துநாலு புவன போகங்களே கிடைக்கும். ஆகையால் உயர்ந்த ஞானத்தால் அடைந்த சீவன்முத்தர்கள் ஆணவாதி சகல உபாதிகளையும் ஞானவாளா லறுத்து விபுவாய் விளங்குவார்கள்.

இத்தகைய ஞானமில்லாது சரியை, கிரியை, யோகங்களின் உபாதியுடன் கூடிய சீவனே மாயையினால் பந்தப்பட்டு ஞானவீனமாகிய சனன மரண துக்கங்கள் சேரும் எண்பத்துநான்கு நூறாயிரம் யோனிகளில் மறுபிறப்புகளை யடைவான். ஆதலாலே, ஆன்மாக்கள் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலரென்று மூவகைப்பட்டிருப்பர். இவர்கள் சன்மாந்திரங்களிற் செய்த சரியை, கிரியை யோகங்களை அநுஷ்டித்ததினால் ஞானத்தை யடைந்து சிவசாரூப்பியத்தை யடைவார்கள்.—(வரும்.)

அத்வைத மதம்.

வேதமாகிய இருக்கு-ஐத்திரியோபநிஷத்தில் "பிரஜ்ஞானம் பிரஹ்மம்" என்றும், யஜுர்-தைத்திரியோப நிஷத்தில் "அஹம் பிரஹ்மாஸ்மி" என்றும், சாமம்-சாந்தோக்யோப நிஷத்தில் "தத்வமஸி" என்றும், அதர்வணம்-மாண்டோக்யோபநிஷத்தில் "அயமாத்மா பிரஹ்மம்" என்றுங் கூறும் நான்கு வாக்கியங்களையே ஆதாரமாகக் கொண்டு நிற்பது அத்வைதமதமாம்.

"ஆரோப மத்திபா சங்கற்பனை யாவவெல்லா, மோரோர் வஸ்துவினைவேறே யோரோர் வஸ்துவெனவோர்த, னாருடுபெணியாத்தோன்ற னரனாகத் தறியிற்றோன்ற, னீருடுகானற்றோன்ற னிரந்தரம் வெளியிற்றோன்றல்."

எனில், பிரம்மத்தைத்தவிர வேறு பதார்த்தங் கிடையாது. அப்பிரமத்தில் மாயை என்கிற வஸ்து ஐக்கியப்பட்டிருக்கும். இம்மாயையினாலே, பிரமத்தினிடத்தில் ஜகத்து ஆரோபிக்கப்பட்டிருக்கிறது. மாயையே ஜகத்துக்குக் காரணம். பரமாகாசமாகிய பிரமத்தினிடத்தில் மாயைதோன்றி, வெண்மையான சுவற்றில் சித்திரக்காரன் ரூபங்களைச் சித்திரித்து எழுதுவது போல், உலகத்தைச் சிருஷ்டிக்கும். எங்குநிறைந்த பிரம்மம் அந்தச்சிருஷ்டியில் ரூபநாமங்களையடைந்துகொண்டிருக்கும். ஆகையால் அந்த பிரம்மமே சீவனாக விளங்கும். மாயையால் ஜகத்து அழிவடையுங்காலத்தில் சீவன் பிரம்மமாய் விடும்.

ஆதலாலே "சத்தியமாய் ஒருக்காலும் ஜகத்தேயில்லை" யென்று சொல்லப்படும். அந்த மாயை பிரம்மத்தி லொடுங்கும். பின்னர் பிரம்மமே ஒன்றாய் நிற்கும். இவற்றால் சீவேசுவரபேதங்கிடையாது. இத்தகைய ஞானத்தை குருமுகமாக யடைந்து ஜகஜீவபர பேதத்தையறிந்து வாழ்தலே முத்தியாகும். பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், சமஸ்த தேவதைகள், மனிதர், யக்ஷ ராக்ஷச பூத பைசாசங்கள், பசுவிருக்ஷ சராசர ஜாலங்கள் யாவும் அந்த ஞானவிரோதத்தால் மாயையினால் கற்பிக்கப்பட்டிருக்கும்.

வேதத்தில் கூறும் உபாசியம், உபாசகமாகிய ஜீவபரபேதங்கள் பொய்யெனப்படும். பிரம்மமே சகல ஜீவபர பேதங்களானாலும் வியவகார தசையில் பொய்யாகத் தோன்றி, பாரமார்த்திக தசையில் மெய்யாகத் தோன்றும். பிரம்மத்திற்கு இரண்டுதசை யுண்டு. சுத்தியிடத்தில் வெள்ளியும், கயிற்றியிடத்தில் பாம்பும்போல பிரபஞ்சம் கற்பிக்கப்படும். அப்படி பிரம்மத்திற்கும் கற்பனாவஸ்தையாகிய குணியும் குணமும் நேரிடுவது மாயோபாதி சக்திபலத்தினாலேயாம். அந்தப்பலத்தினால் அகண்ட சுத்த நித்திய பரமானந்த சொரூபமான பிரமத்திற்கு ஜீவத்துவம் கற்பிக்கும் மாயையென்கிற ஓருவஸ்து உண்டாகும்.

ஆனால் இரண்டுவஸ்துக்க ளிருக்கிறதாக விளங்குகிறதேயெனின், விதைக்குள் மூளை எப்படி அடங்கியிருக்கிறதோ அப்படியே பிரமத்தினிடத்தில் மாயை அடங்கி நிற்குமேயொழிய இரண்டுவஸ்து வாகாதாம். ஆனால், விதையினால் விருக்ஷம் முளையின் ஆதாரத்தைக்கொண்டு கிளையும், பூவும், காயுந் தோன்றுகிற காலத்தில், முளையின் மேன்மூடியாகிய விதை ஒழிந்து விடுகிறபடியால், மூடிக்குச் சமமான பிரம்மம் என்கிற வஸ்துவே யொழிந்துபோய் மாயையே நிற்கிறதெனின், சூரியன் மேகத்தினால் மறைந்தபோது உலகத்திற்சப் பிரகாசம் எப்படி மறையுமோ அப்படியே பிரம்மத்தின் லக்ஷணம் மாயையினால் மறைபட்டிருக்கும். அவற்றை மாயோபாதியுடைய ஆன்மாக்கள் சொல்லுதற் கரிதாகும் "அநிர்வசனீய" மாம்.

ஆகையால், இந்தப்பிராந்திக ளொழியும்படி மனம், அகண்டாகாரம், விவேக முதலிய மூவ் விருத்திகளையும், ஜாக்கிரதை, சொப்பன, சுழுத்தி முதலிய மூவ்வித அவஸ்தைகளையும், ஸ்தூல, சூக்கும, காரணமுதலிய மூவ்விததேக லக்ஷணங்களையும், அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமய முதலிய பஞ்சகோசங்களையும், எண்வித ஆநந்தங்களையும் நிர்விகற்ப சமாதியோகத்தி லிருந்து சாக்ஷாத்கரித்து, சுவாநுபவத்தை யடைந்தால், ஜகத்து, மாயை, ஆன்மலக்ஷணங்கள் தோன்றும்.

இவ்வண்ணமடைந்த சுவாநுபவ குருஸ்வாமிகளை யடைந்து பிரம்ம விசாரணை புரிதல் வேண்டும். பின்னர் சுவாநுபவத்தால் கருவிகரணாதிகளெல்லாம் லயமாவதும், நாமரூப பிரபஞ்சங்க ளெல்லாம் இல்லாமற்போவதும், இந்த ஜகத்தானது மித்தையென்பதும், தம்மிடத்திற்றான் யாவும் தோற்றமென்பதுங் காணலாம். அப்படிக்காணுகிற ஆநந்தமே பிரம்மாநந்தமென்றும், அந்த பிரம்மத்தைத்தவிர, மாயை யுபாதியுடன் கூடிய சிவனும் உலகமும் இல்லையென்றும் நன்றாய் விளக்குகிற அத்வைதாநுபவத்தை யடையக்கூடுமாம்.—(வரும்.)

அத்வைத மதத்தைப் பற்றியது.

"கேள்வி முயல்."

1. பிரம்மம் நித்தியமா? அநித்தியமா?
2. ஜகம் நித்தியமா? அநித்தியமா?
3. ஜகம் அநித்தியமாயின் ஏன் தோன்றுகிறது? தோன்றுவது பிரம்மத்தினின்று? வேறிடத்தினின்று?
4. பிரம்மமே ஜகத்தாகிறதானால், பிரம்மத்திற்கும் ஜகத்திற்கும் சம்பந்தமுண்டா? இல்லையா?
5. பிரம்மம் ரூபவஸ்துவா? அரூபவஸ்துவா?
6. அரூபவஸ்துவென்றால் ரூபவஸ்து அரூபத்திலிருந்து எப்படி தோன்றும்?
7. பிரமத்தின் தன்மையும் ஜகத்தின் தன்மையும் வேறு ஒன்று? வேறாயின் எப்படி பிரம்மமே ஜகமாகும். ஒன்றாயின் எப்படி வேறாகும். பிரம்மம் ஜீவான்மாவா? ஆனல், பிரம்மங்கெட்டு ஜீவான்மா ஆகிறதா? கெடாதேயே ஜீவான்மா ஆகிறதா?
8. பிரம்மம் கெடாதேயே ஜீவான்மாவானல், பிரமத்தையடைய முயலுவானேன்?
9. ஜகமே பிரம்மஸ்வரூபமாக ஆரோபிக்கப்பட்டால் ஜகமிருந்து ஆரோபிக்கப்படுகிறதா? இல்லாமல் ஆரோபிக்கப்படுகிறதா?
10. இருந்து ஆரோபிக்கப்படுகிறதானல் ஜகம் பொய்யா? மெய்யா? ஜகமில்லாமல், பிரம்மமே ஜகமாக பரிணமித்ததினலும் ஜகம் பிரமத்தில் ஒடுங்கி யிருக்கிறதினலும், பொய்யென ஆரோபிக்கப்படுகிற தென்றால், ஜகம் பிரம்மத்திலிருந்து உண்டாயிற்று?
11. ஜகம் பொய்யென்பது எதனல்? ஞானத்தாலா, அஞ்ஞானத்தாலா?
12. அஞ்ஞானம் தேகத்திலிருந்தா? ஆன்மாவிலிருந்தா? இவ்விரண்டுமான பிரம்மத்திலிருந்தா உண்டாகிறது.
13. தேகத்திலிருந்துண்டானல் பொய்யாகும் தேகம் எதன் சேர்க்கையாலுண்டாயிற்று?
14. பஞ்சபௌதிகத்தினலெனில், ஜகம் எப்படி யுண்டாயிற்று.
15. அஞ்ஞானம் ஜகம் என்பவை பிருதிவியிலுண்டானபொழுது, அஞ்ஞானத்தை அஞ்ஞானம் பொய்யென்றன்றோ சொல்வதாயிருக்கிறது.
16. ஞானரூபமாகிய பிரம்மமே அஞ்ஞானத்தை யறிந்து ஜகம் மித்தை= (பொய்) யென்று சொல்லுவதென்றால் ஜகம் வேறாகிறதே. அதை பிரம்மமென்று சொல்லுவது விவேகமாகுமா?
17. இல்லை. ஜகம் வேறுதான். அது அஞ்ஞானத்தாலுண்டாகிற தென்றால், அஞ்ஞானத்தையாருண்டாக்கினது? சுஞ்ஞானமாகியபிரம்மத்திலிருந்து அஞ்ஞான முண்டாகுமா?
18. ஆகாதென்றால், ஜகத்துக்குக் கருத்தாவார்? எங்கே அவர் இருக்கிறார். ஜகத்திலிருக்கிறாரா, ஜகத்துடன் மருவியிருக்கிறாரா, ஜகத்துக்கு வேறாக விருக்கிறாரா?
19. இவையெல்லாம் மாயையின் சேஷ்டையென்றால், மாயையுண்டா? எங்கேயிருக்கிறது? எப்படியுண்டாகிறது? சுயம்பா?
20. நாம் அது என்கிற வஸ்துக்கள் பிரம்மமா? ஆன்மாவா? தேகமா?
21. பிரம்மமும் ஜீவமும் ஒன்றென்றால் ஜகம் அதிற் சேர்ந்தா சேராததா?
22. தேகமின்றி ஜீவனையாகிலும், பிரம்மத்தையாகிலும், மற்றும் பிரபஞ்சத்தையாகிலும் பார்க்கக்கூடுமா?
23. தேகம் பிரம்மத்தின் வசமா? வேறு? பிரம்மத்தை யறிகிறவனுக்கும் தேகம் மெய்யா? பொய்யா? தேகம் பொய்யாமெனின் மெய்யாகிற காலம் எது?
24. தேகம் இயங்குக்கருவியா? இயக்குங்கருவியா? இயக்குங்கருவியானல், யாரால் இயக்கப்படுகிறது? இயங்குங்கருவியானல் தேகம் தானே யியங்குமா?
25. பிரம்மத்தாலே இயங்குகிறதானல் பிரம்மத்துக்கு வேறானவஸ்துவாக வன்றோ முடிகிறது. வேறான வஸ்துவை இயங்கச்செய்வது பிரம்மத்துக்குரிய அவஸ்யம் என்னை?
26. பிரம்மமே ஜகத்தாக இயங்கிவருகிற தென்றால், தான் ஜகத்தான மித்தையாயும், அஞ்ஞானமாயும், தேகமாயும், புண்ணிய பாபங்களை யடைந்தும் படாதனபட்டு இயங்குவானேன்.
27. பிரம்மமாகிய ஒன்று பலவாகுமா? பலவாகாதெனின், ஜகம் வேறன்றன்றோ இங்ஙனம் முடிவுபெறும். இன்பதுன்பங்களை யடையும் ஜீவகோடிகளும் வேறாகவன்றோ முடியும்.
28. சகஜீவபரம் இம்மூன்றும் எக்காலத்துமுள்ளதா? இல்லையெனின், இல்லாதகாலத்தில் எங்கேயிருக்கும்.
29. பரத்திலிருக்கிறதென்றால், பரம் சத்தா? அசத்தா?
30. சகம் சத்தா அசத்தா?
31. ஜீவன் சத்தா அசத்தா? சத்தில் அசத்தும், அசத்தில் சத்தும் பரிணமிக்குமா?

பிரம்மவிசாரணை புரிவோன்.

ஆரியமத தூஷணபரிகாரப் பிரகரணம்.

ஸ்ரீவிஷ்ணு ஸர்வோத்தம தர்மமும், (ஓர் பிரசங்க பங்கமும்.)

பத்திராதிபரே,

நிகழும் மன்மதவருஷம் கார்த்திகைமீ உஅவ (12-12-95)யில், பிரசுரமான இந்துமதாபிமான பத்திரிகையில், "ஸ. வை. குருஸ்வாமிசர்மா" என்பவர் "சிவஸர்வோத்தமம் (ஏர்பிரசங்கம்)" என்னு மகுடத்தின்கீழ் நீண்டவிஷயம் எழுதி வருகின்றார். அது இந்துமதங்களிற் றலைமை பூண்ட வைஷ்ணவ மதத்தாரையும், விஷ்ணுவையும் சாஸ்திர விரோதமாக நிந்தித்து இருப்பதால், அவைகளை யாம் சாஸ்திர ஆதாரத்துடன் பங்கஞ்செய்வதை பிரசுரிப்பீர்களென்று கோருகின்றேன்.

இந்து மதாபிமானிகளே! "ஆநந்தோ நந்தரோநந்தஸ் ஸத்யதர்ம த்ரிவிக்ரமஃ" என்பதில், விஷ்ணுவாகிய திரிவிக்கிரமனுக்கு, "ஆநந்த ஸ்வரூபமஸ்யேதி ஆநந்தஃ" என்கிற வியுத்பத்தின்படி, ஆநந்தமே சொரூபமாக வுடையவரென்று படிக்கப்பட்டிருக்கின்றதை யாண்டும் காணலாம். ஆகையால் அவர்கூறும் ஏற்றமெல்லாம் விஷ்ணுவுக்கே யாயினமை காண்க.

"பஹூநிபுண்யாநிக்ருதாநி ஏநதேநைவ லப்யஃ பரமேஸ்வரோஸௌ" என்றதில், பரமேசுரன் என்றது "ஸமம் ஸர்வேஷு பூதேஷு திஷ்டந்தம் பரமேஸ்வரம்" என்கிற பகவான் வாக்கியத்தின்படிக்கும், "உத்பவஃ க்ஷோபணோ தேவ ஸ்ரீகர்பஃ பரமேஸ்வரஃ" என்கிறபடிக்கும் விஷ்ணுவையேயாம். அவர்காட்டிய வாக்கியங்கள்படி, ஒருவன் சந்திரசேகரன் பாதத்தையடைந்து, அதனால் சந்தோஷ மடைந்தவனாகி, அநேக ஜன்மத்தினாலடைந்த தவப்பலத்தினால், சுருதி மிருதி கர்மங்களை யநுஷ்டித்து, சிவலோகமாகிய கயிலாயத்தை யடைந்து, பரமேசுரனைத் தியானித்து நல்வழிப்புகுவதில் எமக்கு யாதொரு விரோத மின்றாம். ஆசலால் சர்மாவினே அதிகமாகப்புகழ்ந்ததைவிட்டு மற்றவைகளை நோக்குவாம்.

I. அநுபவம் அதாவது வழக்கு.

(i) உலகவழக்கு.

(a) பொது.—சைவப்பழங்களையே சைவர் என்பதுபோல, "பரமவைஷ்ணவப் பழமானுலும் அவனை சைவம் படிந்தவராகச் சொல்வது உலகவழக்கென்றார்." சூத்திரசைவர்கள் வைஷ்ணவர்களுடைய ஆசாரத்தைநோக்கி "சைவம்" என்று சொல்வார்களேயல்லாமல், சைவர் என்று சொல்லார்கள். உலகத்தாரும் வைஷ்ணவர்களை சைவாசாரமுடையவர் என்று ஆசாரமுடையவர்களை மாத்திரம் சாமானியமாய்க் கூறுவர். இதாஉம், துராசாரமடைந்த மாமிச பக்ஷிணிகளாகிய சைவ வைஷ்ணவர்களுக்கெல்லாம் "சைவம்" என்று விசேஷமாக வழங்குவதில்லை. இப்படி சிலரை சைவமென்றும், பலரை அசைவமென்றும் வழங்குவதால், வைஷ்ணவர்களுக்குப் பொதுப்பட சைவம் என்பதில்லை. சிவன் சம்பந்தமுடையவனை சைவன் என்பது புல்லிங்கம்நோக்கி. சிவம் சம்பந்தமுடையது சைவம் என்பது நபும்சகலிங்கம் நோக்கி. இவைகளினால், பொதுவாக, சைவ வைஷ்ணவ ஸ்மார்த்த மார்த்துவ ஜைனிய முதலிய எல்லா மதத்தாரையும் சைவமுடையோர் என்பது ஒழுக்கத்தைப்பற்றிய உலகவழக்கென்க. "சிவநன்மை குறுணிமுத்தி" என்னும் சூடாமணி நிகண்டையும், "ஶிவம் பத்ரஸுகேதகேஷு" ஆதி, கீர்வாண நிகண்டு வாக்கியங்களையுங் காண்க. சிவம் என்பது ஈண்டு ஆசாரம், நன்மையெனக்கொள்க. ஆகலால் சிவம்=சைவம் என்பதும் பொதுப்பட ஆசார சீலத்துக்கே பொருளாதலால், யாவரையும் சைவமுடையோர் என்றழைப்பது ஏகதேசம்பொருந்தும். வைஷ்ணவர்களை யழைப்பது பொருந்தாதென்க. வைஷ்ணவர்களை சைவரென்று படியும்படி பார்ப்பது மபக்குடையோர் கக்ஷியாகும். ஆகவே, சர்மா கொண்ட சாக்ஷி அவாந்தரமாயினமை காண்க.

(b) ஸ்மார்த்தர் என்பது ஸ்மிருதி ஆசாரங்களை யுடையோராம். ஆகையால் ஸ்மார்த்தர் யாவரும் ஸ்மிருதி வழக்குநோக்கி விசேஷ தருமமாக விஷ்ணுவே பரம்பொருள் எனக்கொண்டார்கள். இவர்கட்குவந்த சைவத்துவம் பின்னுண்டானதேயன்றி, முன்னுண்டானதல்ல. முன்னுண்டானதாயிருந்தால் சைவர்களென்று அழைக்கப்பட்டிருப்பர். ஸ்மார்த்தரென்று அழைக்கப்பட்டிரார். ஸ்மார்த்தர்களுக்கு முதற்படியெதுவென்று, சர்மா தேடிய வக்கில்மார்களைக் கேட்டால், அவர்கள்—ஸ்மார்த்தர்களுக்கு ஆதாரமாகிய ஸ்மிருதிகளிற் கூறும் முதற்கடவுள் யாரென்று நாங்கள் சோதித்தபோது, மநு பராசர யாஞ்ஞவற்கிய முதலிய ஸ்மிருதிகளில், விஷ்ணுவையே போதிக்கிறதென்றும், உதாரணமாக யாஞ்ஞவற்கிய ஸ்மிருதியில், பிரதமத்

தில் "தர்மாதர்மௌ தத்விபாகாஸ்த்ரயோபி க்லேஶாஃ பஞ்சப்ராணிநா மாயதந்தே, யஸ்மிந் நைதேநோ பராம்ருஷ்ட ஈஶோ யஸ்தம்வந்தே விஷ்ணுமோங்காரகம்யம்" என்பதில்புண்ணியமும் பாவமும், அப்புண்ணியபாப பலன்களுமாகிய மூன்றும், ஐவகைக்கிலேசங்களும் ஜீவன்களுக்குளவா யிருக்கின்றன. இயற்கையா யவைகள் எந்த ஈசனிடத்திலில்லையோ, அவைகளால் எந்த ஈசன் பரிசிக்கப்படாதவனோ, அவன் பிரணவத்தாலறியும் ஈசனாகிய விண்டுவென்னும் நாமத்தையுடைய வுண்மைப்பொருளை எக்காலமும் வணங்குவாம்" என்றுகூறி, பின்னர் கணபதிபூஜை முதலியவைகளைக் கூறுவதால், ஸ்மார்த்தர்கட்கு முதற்படி விஷ்ணுபூஜையும், வைஷ்ணவத்துவமும், இரண்டாம்படி சிவபூஜையும் சைவத்துவமு முண்டாயிற்றென்று சாக்ஷி கூறுகின்றமையால், உயர்ந்தபொருள் சிவம் என்பதற்கொரு சாக்ஷி தேடினது தாழ்ச்சியாயினது காண்க.

(*c*) பெருமாள் என்பது உயர்ந்த புருடன்=புருஷோத்தமன். ஈஶ்வரன் என்பது சர்வசத்தியுடையவன். பெருமாள் - தென்மொழி. ஈசன்-வடமொழி. இருபெயரும் ஒரேபரத்துவ நிர்ணய பதம். விஷ்ணுவுக்கு ஈஶ்வரன்=பெருமாள் என்பது இயற்கைப்பெயர்; சிவனுக்கு வந்தது, தான் ருத்திரனாய்ப் பிறந்து அழுமுகமாயோடினதால், புருஷேஶ்வரன்பெயரை பிரமனாலிடப்பட்ட இடுகுறிப்பெயராம். அன்றியும் அசுரமோஹநார்த்தம் ஆகமங்கூறி கோயிலும் உற்சவமும் அடைய வரம் பெற்றுக்கொண்டதால், ஈசுரன் கோயில் என்று பெயராயிற்று. ஆகையால் விஷ்ணுவுக்கே ஈசுவரனென்ற பெயர் ரூடியாக வமைந்துள்ளது. வைஷ்ணவர்கள் ஈசுவரன் என்ற பெயரை தரித்துக்கொள்வதில்லையென்று சர்மா கூற்று. "ஸர்வஶக்திமத்தயா ஈஶ்வரஃ" என்பதால், எல்லாசத்தியையுமுடையவன் ஈசுவரன் என்றமைந்தது. "ப்ரதானம் ப்ரக்ருதிர்மாயா புருஷோஜீவஸ்தயோரீஶ்வரஃ" "ஈஶஶ்சசேஶௌதௌ வஶேவர்த்த யதீதிவா கேஶவஃ" என்பவைகளில், விஷ்ணுவுக்கு ஈசுவரன், புருஷேசுவரன், புருஷோத்தமன், கேசவன் நாராயணமுதலிய நாமங்கள் ஒரேபொருள் தருகின்றனவாதலாலும், புருஷோத்தமன் கேசவன்முதலிய பெயர்களை வைஷ்ணவர்கள் தரிப்பதால், ஈசுவர பதத்திற்குச் சரியாக விளங்குகின்றன வாதலாலும், ஈசுவரன் பெயரை பிரமாவினால் உருத்திரனுக்குப் பிக்ஷைகொடுத்துவிட்டபடியால், வைஷ்ணவர்கள் அதைத் தரிக்க வேண்டுமென்ப தவசியமில்லையாதலாலும், ஈசுவரபதத்தை வைஷ்ணவ சம்பிரதாய கிரந்தங்களிலும் ஆண்டுவருவதாலும், சர்மா இதைக் கொண்டு வழக்கிடுவது அப்பிரயோஜனமென்க. இன்னும் வைஷ்ணவர்கள் "ஈஶ்வரா" என்று சொல்வதால், சிவனே பரதெய்வமாகக்கொண்டிருக்கிறதாக ஒரு அபிப்பிராயங் கொடுக்கிறார். ஈசுவரன் என்றது விஷ்ணுவின் பெயரென்று கீழேகாட்டியபடியால், அது வைஷ்ணவர்களுக்கு முரித்தேயாகும். சர்மா இஷ்டப்படி யோசித்தாலும், இவருக்கிஷ்டதெய்வமாகிய சிவபிரானும், "கைலாசஶிகரேரம்யே விஷ்ணுமாராத்யஶங்கரஃ" என்றும் "ஸ்ரீராமராமராமேதி ஏதத்காரியம் ஸமுச்யதே, அதஸ்தே ஜாநகீநாதம் பரப்ரஹ்மாதி நிஶ்சிதம்" என்றும் தன்னாவினாலே துதித்து மாராதித்தும் வருகிறபடி, ராமா, நாராயணா, கோவிந்தா முதலான நாமங்களையும் வைஷ்ணவ ஸ்மார்த்த சைவர் யாவரும் ஆபத்காலங்களில் கூறுவதால், இவரெண்ணம் தலைக்காட்டா தொழிந்ததென்க.

(*d*) "பிர்ம்மஜ்ஞாநம், சிவஜ்ஞாநம், பிரம்ஹாநந்தம், சிவாநந்தம், பிர்ம்ஹாநுபவம், சிவாநுபவம்" என்று ஆத்மகோடிகளில் ஒருவராகிய சிவபிரானுக்கு அமைந்ததன்று. பரமாநந்தம், சதாநந்தம், நித்யாநந்தம் முதலிய பெயர்களோடு, எம்பெருமானாகிய பரமபதநாதன் அநுபவத்தை யடைந்தவர்களே சொல்வார்கள். ஆகவே, வேதத்தில் "நாராயண பரப்ரஹ்மம், தத்வம் நாராயணஃபரஃ" என்றபடி ஸ்ரீமந்நாராயணனே பரப்ரஹ்மமாகையால், பிரம்மாநந்தம் என்பது விஷ்ணுவாநந்தத்தையே "ஶாஶ்விதம் ஶிவமச்யுதம்" சாசுவதமாயும், சிவமாயும், அச்சுதமாயும் இருக்கிற வஸ்து விஷ்ணுவே யாகையால், சிவாநுபவம் என்பதும் விஷ்ணு அநுபவத்தையே. "அதசச்சிதாநந் தாத்மாநம் ஸ்ரீராம மீஶ்வரஃ ப்ரபச்ச" என்பதும் ஸ்ரீராமனையாதலால், சச்சிதாநந்தம் என்பதும் விஷ்ணுவையே எனக்கொள்க. மற்றவர்களை பிரம்மம், சிவம் என்பது பிரமையேயாகும். சிவனாகிய உருத்திரனுடைய ஆநந்தாநுபவங்களைச் சொன்னவையெனில், ஏன் ருத்திராநந்தம், சங்கராநந்தம, பசுபதியாநந்தம் என்று சொல்லவில்லை. ஆகையால், விஷ்ணுவாநந்தம் முதலியன சொல்லாதிருத்தலினால் யாதொருகுறையுமில்லை. விரிவஞ்சி விடுத்தாம்.

(இன்னும் வரும்.)

தி. பரவஸ்து சேஷாத்திரி அய்யங்கார்,
பல்லாரி.

பொதுப்பிரகரணம்.

கல்வி யாது?

புருஷர்களில் அநேகர் பள்ளியிற் பயிலுங்கா லத்தில், இலௌகிக விஷயத்திற் குரிய கல்வி யைக் கற்று, பல பரிட்சைகளிற் றேறி, பெரிய உத்தியோகங்களைச் செய்யவேண்டு மென்கிற அவாவொன்றையே கடைப்பிடியாகப் பிடித்து க்கொண்டு வருகின்றார்கள். இம்மார்ச்சாலப்பிடி யிருப்பது அவசியமாயினும் அக்கல்வி இகத் திற்குப் பிரயோஜனமே யொழிய பரத்திற்குரிய தல்ல. இகத்திற் குரிய கல்வியைக் காட்டிலும், கடவுளுடைய அடிமலரைத் தொழுது நிற்கும் மர்க்கடகப்பிடியாகிய கல்வியொன்றே எக்காலத் தும் பலன் தருவதா யிருக்கும்.

ஆகையினாலே "வித்தைவிரும்பு, வீடுபெற நில்" என்று ஔவையாருஞ் சொன்னார். அரசன் முதல் பிச்சைக்கார னீறாகவுள்ள யாவரும் வயிற் றை எப்படியாகிலும் வளர்த்துக்கொண்டு வரு வதை பிரத்தியக்ஷமாய்க் காண்கிறோம். ஈச்சு வரனுடைய திருவடிக்கன்பராய் பரலோகத்தை யடையும் வித்தையைக் கற்றுத் தெளிவது ஏக தேசமாயிருக்கிறது. இப்படியாதற்குக் காரணம் ஆரியமத நூல்களைச் சிறுவர்களுக்குச் சிறுவ யதில் பயில்விக்கா திருப்பதேயாம். அரசாங் கத்தார் பள்ளிக்கூடங்களுக் கேற்படுத்தும் நூல் களில் நீதிமார்க்கங்களைமாத்திரம் காணலாமே யல்லாமல், பக்திமார்க்கங்கிடையாது. இதற்கு ஔவையார் நீதிவாக்கியங்களில் "திருமாலுக் கடிமைசெய்" என்கிற வாக்கியத்தை எடுத்து விட்டுப் பதிப்பித்திருக்கு மொன்றே போதுமா ன சாக்ஷியாக விருக்கின்றது. ஆகையால் நஞ் சிறுவர்களுக்கு மதநூல்களைப் போதிக்க வேண் டியது அவசியம். இப்பக்திமார்க்கத்தை பள் ளியிற் பயிலுஞ் சிறுவர்களுக்கு மூளையிலேயே கிள்ளி யெறிந்துவிடுவதால், அவர்கள் பிரமவி த்தையை யறிந்துகொள்ளக் கூடாமற் போகின் றார்கள். இவ்வண்ணமாக மகம்மது, கிறிஸ்து மார்க்கச் சிறுவர்களுக்குச்செய்யாமல், அவரவர் கள் மதபோதனைகளை யூட்டுவதால், அவர்களுக் குப் பக்திசிறக்கின்றது. எங்கேனும் ஒன்றிரண் டு ஆரியமத போதனை செய்யும் பள்ளிக்கூடங்க ளிருப்பினும், அப்போதனையொன்றால் யாதொ ருபயனுமில்லாமற் போகின்றது. பலதுளி பெ ருவெள்ளமாமாப்போல், எங்கும் ஆரியமத நூல் களைப் போதிக்க முயற்சிசெய்வது அவசியமா யிருக்கிற தென்பது சொல்லாதமையும்.

இதுநிற்க, நஞ்சிறுவர்கள் நீதிகளையேனுமுண ர்ந்திருக்கின்றார்களென்று பார்த்தாலோ, அவை களை பாலியத்திலேயே மறந்துபோய், செருக்கு கொண்டு, "கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்- நிற்கவதற்குத்தக" என நிற்காமல், வன்னெஞ் சுடையராய், வம்பருந் துன்பரு மாகின்றார்கள். இவர்கள் "இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினு மென்று, மடங்காதா ரென்று மடங்கார் - தடங் கண்ணாய், உப்பொடுநெய்பால் தயிர்காயம் பெய் திடினும், கைப்பறா பேய்ச்சுரையின்காய்" என்ற வாக்கியங்களுக்கு ஒப்பாய்விடுகிறார்கள். ஏனெ னின், அவர்கள் தினேதினே கல்வி, நீதி, மத போதனைகளைப் பெறாதிருக்கிற குறைவேயாம்.

"சீலங்குலமடியா ளண்டிற்கெடுங் கணிகை, யாலிங்கனந் தனநாசமாகும் - நூலிழந்த, வல்லி தழுவக்குறையும் வாழ்நாள் பிறர்தாரம் - புல்லி னர்க்கெல்லா நலமும் போம்." என்றபடி, அடி மைப்பெண்களால் ஒழுக்கமும், வேசியால் தன நாசமும், விதவையால் ஆயுள்குறைவும், பிறர் மனைவியால் எல்லாநலமும் போகும் என்பதை சிறுவர்க ளறிந்தும், அவர்களையே தேடி யணை ந்து கெடுகின்றார்கள். இவைகளை யெல்லாம் ஒழிப்பது கடவுள் தியான மொன்றினாலே யா கும். ஆகையினாற்றான், "கற்றதனாலாய பயனெ ன்கொல் வாலறிவ னற்றா டொழாஅ ரெனின்" என்று கூறப்பட்டிருக்கின்றது.

---o---

ஸ்திரீகள் குறை.

பூர்வம் நமது ஸ்திரீகள் கல்வியில் தேர்ந்து தேவபக்தி, பதிவிரதாபக்தி அடைந்து, அநந்த சாஸ்திரங்களிற்பயின்று, அநேக இராஜபத்தினி களும், இராஜபுத்திரிகளும், இருஷிபத்தினிமார் களும் கல்வியே ரூபமாய் விளங்கும் சரஸ்வதி தேவியுடன் உல்லாசமாய் உலாவி எல்லாவற்றி லும் சிறப்புற்றோங்கி தாமடைந்திருந்த பக்தி யாசாரத்திற்குத்தக்கபடி தனதான்ய லக்ஷ்மீசம் பத்துகள் அடைந்து குறைவின்றி தான தர்மங் கள் செய்துவந்தனர் என்று "சகுந்தலம்" இரா மாயணம்" "மகாபாரதம்" முதலிய பூர்வபுரா ணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி ஸ்திரீகளும், புருஷர்களும், சகல விஷயங்களி லும் சம அறிவு அடைந்து சந்தோஷமாய் வா ழ்ந்திருந்ததினாலேதான் நமது தேசம் பூர்வம் மிகவும் க்ஷேமமடைந்து காலக்கிரமம் தவறாமல் சிறப்பை அடைந்து இருந்தது.

அப்பேர்ப்பட்ட நல்ல ஸ்திதி வரவர குறைந் து, ஸ்திரீகள் கல்விப்பயிற்சி குலைந்து, சரஸ்

வதிதேவியின் நட்பையும் தேவபக்தியையும் இழந்து, மடமை யடைந்து சுத்த சீர்கேடான ஸ்திதியில் இருப்பதினால்தான், நமது தேசம் வரவர க்ஷீணித்து ஸ்திரீ புருஷ மரியாதை தடமொறி, கற்புநிலைமை தலைகீழாய் கவிழ்ந்து அக்கற்பின் பெருமையை ஸ்திரீகள் மறந்து, அற்ப பொருட் பெருமையில் மூழ்கி, பொன்னே! பொருளோ! என்று கனவிலும், நினைவிலும், நீங்கா ஏக்கமுற்று தான்போனபோக்குக்கு தலையுமில்லை காலுமில்லை என்பதுபோல் கலங்கி, சிறுமையடைந்து சீர்கெட்டு தியங்கி இருக்கிறார்கள். ஸ்திரீகள் இச்சிறுமை யடைந்ததற்கு காரணம்புருஷாளே, அதற்குச்சந்தேகமுண்டோ? இல்லை இல்லை. எப்படியெனில், புருஷாள் தாங்கள் பூர்வத்தில் கல்வித்தேர்ச்சி யடைந்து சாஸ்திரங்களைப் பலவாறாக உணர்ந்து தேவபக்தியில் சிறந்து சத்தியமே நிலை என்றெண்ணி தேவாராதனை, தேவபூஷணை கிரமப்படி நடத்தி, ரிஷீஸ்வராள், முனீஸ்வராளைவணங்கி தங்களைத் தாங்களே காக்கும்படியான பலதர்மங்களைக் கிரமப்படி நடத்திவந்திருந்தார்கள். இப்படியாக அவர்கள் அனுசரித்த நெறிகளை வரவர ஒதுக்கி இப்போது பொய், சூது, வஞ்சனை, பொறாமை முதலியவை தங்கள் உயிருக்குற்ற துணை என்றும், பொருளே புண்ணியம் தரும் என்று நம்பி பூர்வ வழக்கங்களை யெல்லாம் பழித்து, அவைகளை கைவிட்டு, தேவபக்தி லௌகிகப் பெருமைக்குக் குறைவென்றும், சாஸ்திராப்பியாசம் செல்வப்பேறுக்குத் தடையென்றும், தேவாராதனை வீண் திரவிய விரையமென்றும், தர்மம் தாழ்வு என்றும் சில மூடமதிகளைக்கொண்டு செல்வத்தையும், சிறப்பையும் அன்னியதேசஸ்தர்களுக்கு ஒப்பித்துவிட்டு மரியாதை கெட்டு அலக்ஷியத்திற்குப் பாத்திரராகிவிட்டதால், கட்டப்பாறையே காற்றில் அடிபட்டுக்கொண்டு போக இலவம்பஞ்சுக்கு என்னவந்தது என்பதுபோல புருஷாளாகிய நாமே இச்சிறுமை யடைந்தோமே ஸ்திரீகள் எப்படியானாலும் என்னவென்று அலக்ஷியஞ்செய்து ஸ்திரீகளை புருஷாளில் பெரும்பான்மையோர் தங்கள் அடிமைகளாக எண்ணி மடமைத்தனத்தில் வைத்திருக்கிறார்கள்.

கடவுள் ஸ்திரீகளை புருஷாளுக்கு அடிமைகளாகவல்ல சிருஷ்டித்தார். அல்லது இரவும் பகலும் உழைத்து அவர்கள் ஆகாரத்தைத்தேடிக் கொள்ளவாக அல்ல, அவர் அவர்களைச்சிருஷ்டித்தார். புருஷர்களுக்குள்ள சகலவித பாத்தியதைகளும் ஸ்திரீகளுக்குண்டு. மனம், தன்தேகம் வேறென புருஷனும் பெண்சாதியும் ஒருவருக்கொருவர் எண்ணவேண்டும். ஸ்திரீக்கு கற்புநிலைமையும், சத்தியமும் இருக்கவேண்டும் புருஷனுக்குச் சத்தியம் இருக்கவேண்டும்.

ஸ்திரீகள் கல்வியிற்றேர்ந்து கற்புநிலைமையறிந்து இல்லம் நடாத்தும் வழியைஉணர்ந்து கணவர்களுக்குத்தக்க ஆலோசனை ரூபிகளாய் இருக்கவேண்டிய கடைமை.

இப்படியன்றி ஸ்திரீகள் கல்வியிற் பயிலவும், நூல்களை ஆராயவும், அதனால் கற்புநிலைமை இன்னதென்று அறியும்படியாகவும் அவர்களுக்கு புருஷாள் இடங்கொடாவிட்டதனால் ஸ்திரீகள் மடமையடைந்து தங்கட்கு உள்ள சிறந்த புத்தி கூர்மையானது,கையாடப்படாத இருப்பாயுதம் துருவடைந்து மொக்கையாவதுபோல் மாறி, கற்புநிலைமை அறியச்சக்தியற்று, இல்லம் நடாத்தும்வழிக்கு யோசனைதோன்றாமல்,அதனால்புருஷர்க்கு வெறுப்பு உண்டாகி இருவரும் சச்சரவுபட்டு இல்லம் க்ஷீணித்து ஸ்திரீ புருஷ மரியாதைகெட்டு இருவரும் துர்ப்பாக்கிய மடைந்திருக்கிறார்கள்.

———o———

நல்லபெண்டாட்டிக்கு ஒருசொல்.

(சுகுணபோதினி.)

1. உன் கணவன் சொல்லுக்குத் தடுத்துச் சொல்லாதே. தடுத்துச் சொல்வது மனதுக்கு இதமல்ல, கடுப்பு உண்டாக்கும்.

2. வார்த்தைக்கு வார்த்தை சொல்லும் மனைவியாரிடத்தில், கணவருக்கு உள்ள அன்பு அற்றுப்போம். விருப்பின்றி வெறுப்புத் தோற்றுவிக்கும். நாள் ஏற ஏற அவ்வெறுப்பு முதிரும்.

3. வழக்கமாய்த் தன்கணவன் சொல்லைத்தட்டிப் பேசும் மனைவிக்கு, வேறு நற்குணங்கள் இருப்பினும் அவை விளங்காது.

4. முக்கியமாய் வீட்டுக்காரியங்களைப் பார்த்துக்கொண்டுவா. வேறு விஷயங்களில் உனக்கு விசாரம் வேண்டாம்.

5. உன்னுடைய நல்லொழுக்கம்ஒன்றே உன் கணவனுக்குப் புத்திசொல்லும் உபந்நியாசமாய் இருக்கவேண்டும்.

6. உனது சுகிர்தத்தைக்கண்டு உன்கணவன் உன்மேல் அன்புவைக்கும்படி நடக்கவகைபார்.

7. சுகுண சுகிர்தங்களைப் பற்றிப் பேசுவதினால் அல்ல, உனது நடக்கையிலும் நீ செய்யும் செய்கையிலும் அம்மேலான குணம் விளங்குவதினாலேயே நீ குணபூஷணியென்று உன் மீது கணவருக்கு ஆசை பெருகும்.

8. எப்பொழுதும் உன் கணவனை உபசரித்துக்கொண்டுவா. இப்படிச்செய்வாயானல் உன்னைக்குறித்து உன்கணவனுக்கு வலியச் சிந்தனை யுண்டாகும்.

9. கணவன் உனக்குச்செய்யும் நன்மை தினையளவா யிருப்பினும், அதைப் பனையளவாய்க் கொண்டாடு. இவ்வண்ணம் பாராட்டுவாயானல் அது அவனைப் பின்னும் அதிக நன்மை செய்யத் தூண்டிவிடும்.

10. அகங்கரித்துக்கொண்டு உன் கணவன் மனதை நோக ஒன்றும் செய்யாதே. பெண்கள் பெரும்பாலார் அகங்காரிகளே என்ற வாக்குக்குத் தப்பி நடந்துகொள்.

11. கணவனிலும் மனைவி புத்திசாலியாயிருக்கவுங் கூடும். அப்படியிருந்தாலும் அதைஅவள் கணவனுக்குக் காண்பிக்கத் தகாது.

12. கணவன் சொல்லிய புத்தி மதி பிரமாதமென்று உன்னெஞ்சறியத் தோன்றும்பொழுது அதை அவனுக்குச் சொல்ல எத்தனிக்காதே. ஆனல் யுத்திபுத்திக்கேற்ற நல்லொழுக்கம் இன்னதென்று ஆராய்ந்து சாந்தமாகவும்,மெதுவாகவும் அவனுக்குச் சொல்ல வகைபார்.

13. உன் கணவன் நோயாயிருக்கும் பொழுது நீ அவனை உபசரித்துப் புத்திபூர்வமாய் நட. நீ கோபத்தைக் காட்டாதே. உனக்கு அபசாரம் வந்ததாகவும் தோற்றுவிக்காதே. மிருதுவான குணமும், விவேகமும் எவ்வகை அபசாரத்தையும் மாற்ற வல்லவைகளென்று நம்பு.

14. மனக்கடுப்பு நீங்கி உன்கணவன் தன் பிழையை நினைந்து துக்கிக்கும்பொழுது அதை சொல்லிக் காட்டி அவனை சொல்லாமற் சொல்லாதே.

15. உன் கணவன் செய்யும் தொழிலிலும் அவன் மனதிற்கு இதமான இன்பங்களிலும் நீ மனங்குவிந்து சிந்தனையாயிரு. அப்படி செய்வாயானல் உன் கணவனுக்கு வீடுவிட்டு நாடேறுமல் உன்னுடன்கூடிவாழ மனப்பற்றுஉண்டாம்.

16. சிர்மையாய் ஒழுக்கம் பயின்று வா.

17. பெருவாழ்வு வாழ நாடாதே.

18. மிதம் தப்பாமல் இன்பம் தேடு.

19. வஸ்திரபூஷணுதிகளில் வெகு ஜாக்கிரதையாயிரு.

20. உன் நிர்வாகத்துக்குத்தக்கபடி அப்போதைக்கப்போது மாற்று வஸ்திரம் தரித்துக்கொள். இப்படிச்செய்வது முக்கியம். இதைப் பலர் எண்ணுகிறதில்லை.

திருக்குறள் தாற்பரியம்.

முதல் அதி. கடவுள் வாழ்த்து.

அகரமுதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

பொருள்.

எழுத்தெல்லாம்=(பலபாஷையின்) எழுத்துக்களெல்லாம்
அகரமுதல=அ என்னும் எழுத்தை முதலாகவுடையன
உலகு=(அதுபோல் பலவிதமான) உலகம்
ஆதிபகவன்=முதற்கடவுளை
முதற்று=முதலாகவுடையது.

தாற்பரியம்.

எல்லாப்பாஷைகளிலும் அகரமுதலாயிருப்பதால் எழுத்தெல்லாம் என்று கூறப்பட்டதாம். அன்றியும், "அகாரோவை ஸர்வாவாக்" என்றபடி, எழுத்துக்களாலுண்டாகும் சப்தங்களுக்கு அகரமே உற்பத்தி ஸ்தானமாகையால் அகரம் மூலமெனினு மமையும். பகவன் எனவே கடவுள் எனப்பொருள்தர, ஆதியென்பதேனெனின், பலகடவுளருளொன்று உலகங் கூறுவதால் ஆதியென்று முதற்கடவுளிருப்பைச் சொல்லினராக.

"அஇதி ப்ரஹ்ம, அகாரோவை விஷ்ணு:, அக்ஷராணு மகாரோஸ்மி, தஸ்ய ப்ரகிருதி லீநஸ்ய, அ இதி பகவதோ நாராயணஸ்ய ப்ரதமாபிதாந மபிதத தாகிந்நாம மங்களம் நக்ருதம்" என்கிறபடி அகரம் பிரமஸ்வரூபமும், அகரம் வியாப்பியப் பொருளும், (அழிவில்லாத தாகிய ஓங்கார ஸ்வரூபத்துக்கு) அகாரமே பிரதானமும், (அகாரசப்தத்திலே) பிரகிருதி அடங்கியிருப்பதும், அ என்கிற அக்ஷரத்துக் குரித்தான பகவான் நாராயணனே முதலாகவும், மங்களமாகவு மிருக்கிறுன் எனக் கூறி யிருக்கின்றது. "ஓங்காரப்ரபவாவேதா:, ஓங்காரப்ரபவாஸ்வரா:, ஓங்காரப்ரபவம்ஸர்வம், ஜகத்ஸ்தாவரஜங்கமம்" என்றுங்கூறுகிறபடி வேதத்துக்குப் பிரணவம் என்கிற ஓங்காரங் காரணமும், சுரங்களுக்குப் பிரணவங் காரணமும், சகத்து, தாவர சங்கமங்களுக்குப் பிரணவங் காரணமுமா யிருப்பதாலும், அப்பிரணவத்திலுள்ளும், அகாரங்காரணமா யிருப்பதாலும், "அகாரோ விஷ்ணுவாசக:" என்று கூறுவதாலும், உலகம் அகரவாச்சியனுகிய முதற்கடவுளை யுடைத்தா யிருப்பதை வேதமுங் கூறியதென்க.

ஔவையார் நீதிவாக்கியம்.

முகவை - இயற்றமிழாசிரியர்
இராமாநுசகவிராயர் செய்த
காண்டிகையுரைக் கிணங்கியது.
(உ-ம் புத்தகத் தொடர்.)

சக்கர நெறிநில்.

பொருள்.

சக்கரம்=காவற்சக்கரத்தைச் செலுத்தும்
நெறி=(அரசன்) நெறியில்
நில்=விலங்காமலிரு.

கருத்து.—சக்கரவர்த்தியாகிய பேரரசன் உலகத்தைக் காக்கும்பொருட்டு அரசநீதியாகிய இரதத்தைச் செலுத்தும் நெறியில் மாறுபடாது அடங்கிநிற்க வேண்டுமென்பதாம். அரசன் ஆக்கினையைக் கடந்து எதிர்த்தவனைக் கண்டிப்பானகையால், உவமையாகுபெயராய் ஆக்கினையைச்சக்கரமென்றூ ரெனினு மமையும். இந்நெறி விலங்குமானல் அரசன் கோபிப்பான் என்பதாம்.

குறளுதாரணம்.

யாண்டுச்சென்றியாண்டு முளராகார் வெந்துப்
வேந்து செறப்பட் டவர். [பின்

பொருள்.

வெந்துப்பின்=வெவ்வியதாகிய வலிமையை
யுடைய
வேந்து=வேந்தனுகிய சக்கரவர்த்தியால்
செறப்பட்டவர்=கோபிக்கப்பட்ட அரசர்
யாண்டுச்சென்று=(அவனைத்தப்பி) எங்கே
போய் (உளராவார்.)
யாண்டும்=எவ்விடத்தும்
உளராகார்=உயிர்வாழ்வாராகார்.

கருத்து.—வலிமை யுடைய சக்கரவர்த்தியினல் கோபிக்கப்பட்ட சிற்றரசனுயினும், அவன் பதியைவிட்டு, மற்றோர் அரசனுடைய தேசத்திற்குச்சென்று அடைக்கலம் புகுந்தாலும், அத்தேசத்தார் நாமும் அழிவமென்று கருதி இடங்கொடார். இவன் எங்குசென்றபோதிலும் தன்னுயிரைக் காத்துக்கொள்ளமாட்டான். ஆதலினலே, சிற்றரசனுக்கே அக்கேடுவருமாயின் குடிகட்கு வரும் துன்ப மள வில்லவாம். இவற்றினல் அரசன் செலுத்தும் நீதியினின்று, கொலை, கள்ளம், சூது முதலிய பாதகங்களை யொழித்து உயிர்வாழ வேண்டுமென்பது இனிது பெறப்பட்டது.

கட்டுக்கதைகள்.

கோநாயும், பெண்பன்றியும்.

ஒரு கோநாய், பிரசவிக்கிற தருணமாயிருந்த ஒரு பெண்பன்றியிடஞ் சென்று உன்குட்டியை நான் காக்கிறேனென்று மிகவும் அன்பா யுரைக்க, அக்கபடவேஷ சம்பாஷணையை யுணர்ந்த பெண்பன்றி அதிக மரியாதையோடு அதின் சிரத்தைக்காக வந்தனஞ்செய்து, தயவோடு நீ தூரப்போய் எனக்குபகாரஞ் செய்யென்றும், எவ்வளவு தூரத்தி லிருந்து உபகாரஞ்செய்கிறையோ அவ்வளவும் நன்மைதா னென்றுஞ் சொல்லியது.

நீதி.

நல்ல உபகாரஞ் செய்கிறதாக பெயரிட்டு வைக்குங் கண்ணியைப்போல நமக்கபாயந்தருங் கண்ணிகளொன்றுமில்லை.

மலை கெர்ப்பவேதனைப்படுவது.

ஒருவூரில், அதைச்சார்ந்த ஒருமலை கெர்ப்பவேதனைப்படுகிறதென்று, ஒருவிந்தையானசமாசாரம் வெளிப்படவே, அதன்பேரில் அவ்விடத்திலுள்ள எல்லாக் குடிகளும், இவ்வளவு பெரிய ஜீவன் எவ்வளவு பெரிதான பிள்ளையைப்பெறுமோ அதை அறியலாமென்று ஒன்றாய்க்கூடிப் பார்த்துக்கொண்டிருக்கும்போது, திடீலென்று மிகவும் அற்புதமான ஒரு சுண்டெலி வெளியில் வந்தது.

நீதி.

முதலில் ஆசையை யுண்டாக்கிக் கடைசியில் நிராசையாய் முடிக்கின்ற வீண் அமளிகளைப் போல, மனிதர்களைப் பகடியில்விடுவதிலும் வேறொரு கெடுதியு மில்லை.

கழுதையும், நன்றியற்ற எஜமானும்.

ஒரெளியகழுதை, வயதினலுங் கடின வுழைப்பினலும் மிகவும் பெலவீனமான துன்பத்தை யுடையநிலையில் நொந்துபோ யிருந்தபடியால், தன் சுமையின் பளுவோடு இறடிவிழும்படி நேரிட்டது. அதற்காக அதன் கொரேமுள்ள எஜமான் கிருபையில்லாமல் தட்சணமே அடிக்கத் தொடங்க, கழுதையானது, ஐயோ! இது நன்றியற்ற லோகாசாரமா யிருக்கின்றது. நெடுநாள் விசுவாசத்தோடு ஊழியஞ் செய்ததற்கும் ஒரு நாள் நேர்ந்த தற்செயலானு தப்பிதத்திற்குஞ் சரிநிறையா யிருக்கின்ற தென்றது.